Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNODDAM

வெளியீடு-54 ஆகஸ்ட் - செப்டம்பர் 2010 விலை: 10.00

இன சமத்துவமும்
பொருளாதார
சமத்துவமும்
பற்றிய
விழிப்புணர்ச்சி
இல்லாதவிடத்து
அங்கு
ஜனநாயகம்
அர்த்தமிழந்து
போகிறது.

# அரசியல் யாப்பு மாற்றம்
## யாருக்கு நன்மை பயக்கப் போகின்றது



ஜே.ஆர். ஜெயவர்த்தனா தனக்குப் பிறகு யாரும் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் கொண்ட ஜனாதிபதியாக வரக்கூடாது என்ற நோக்கத்தில் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பில் விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை அறிமுகம் செய்தார். ஆனால் மஹிந்த ராஜபக்ஷவை மூன்றாவது முறையும் ஜனாதிபதியாக ஆக்குவதற்கு வகை செய்யத் தேவையான மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட பெரும்பான்மையை வழங்குவதற்கு அரசியற் கட்சிகள் தாமாகவே முன்வந்துள்ளன.

தனக்கு வேண்டியதை எந்த நேரத்தில் எப்படி செய்வது என்பதில் ஜே.ஆருக்கு இருந்த அரசியல் நிதானத்தையும், தான் நினைத்ததை செய்து முடிப்பதற்கு எதையும் செய்யும் ஆற்றலில் பிரேமதாசா கொண்டிருந்த பிடிவாத ஆளுமையையும், மக்களை வெல்லுவதில் சந்திரிகா கொண்டிருந்த கவர்ச்சியையும் மஹிந்த ராஜபக்ஷ ஒருங்கே கொண்டிருக்கிறார் என்ற அரசியல் அவதானிகளின் அபிப்பிராயத்தை அவர் மீண்டும் நிரூபித்துக்கொண்டிருக்கிறார். அரசியலில் சரி எது பிழை எது என்பதை விட சாதிப்பவனே வெற்றி வீரனாக மாலை சூட்டப்படுவான். ராஜாக்கள் காலத்திலும் அதுதான். இன்றைய ஜனநாயக காலத்திலும் அதுவே.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து காதர், அஸ்வர் என அரச பக்கம் போனார்கள். இதுவரை ஐ.தே.கயின் 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணைநது விட்டனர். ஐ.தே.க சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியைச் சார்ந்த பிரபா கணேசனும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் திகாம்பரமும் அரசின் பக்கம் போனார்கள். முஸ்லிம் காங்கிரஸ் உடைந்து ஒரு பகுதியினர் அரசாங்கத்தோடு போவதற்கான நிலைமை ஏற்பட்டதால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், முழுக்கட்சியையும் அரசுக்கு ஆதரவாக நிறுத்துவதென முடிவு செய்துவிட்டார். தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பியசேனாவும் சக்தியின் மின்னல் புகழ் ரங்காவும் அரசின் பக்கம் தாவிவிட்டனர். ரங்கா தான் பிரதிநிதித்துவப்படுத்தும் நுவரெலியா மக்களின் நலன் கருதி அரசுக்கு ஆதரவளித்ததாக தெரிவித்திருக்கின்றார். ஏற்கனவே இத்தகைய நிலைப்பாட்டை எடுத்திருந்த அரசியல்வாதிகளை கிண்டலடித்துக்கொண்டிருந்தவர் இந்த ரங்கா என்பதை நினைக்காமலிருக்க முடியவில்லை.

ஐ.தே.க விலிருந்து சரமாரியாக உறுப்பினர்கள் அரசின் பக்கம் சென்றுகொண்டிருக்கிறார்கள். பலம் பொருந்திய எதிர்க்கட்சி என்பது இலங்கையைப் பொறுத்த மட்டில் இனி கேள்விக்குறிதான்.

ஜனாதிபதி பதவிக்காலத்தை காலவரையற்று நீடிப்பது சர்வா

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின்
## 19 வது தேசிய மாநாட்டிற்கு எமது வாழ்த்துக்கள்

பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் பொதுச்செயலாளர் தி. ஸ்ரீதரன்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 19வது தேசிய மாநாட்டிற்கு நாம் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

1940 களின் முற்பகுதியிலிருந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் நலன் மற்றும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் சமூகங்களிடையே சமத்துவத்திற்காகவும், சர்வதேச சகோதரத்துவத்துக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்திருக்கிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிடம் இலங்கை மக்களின் சமூக வாழ்வு தொடர்பாகவும் இனங்களி



டையே உறவுகள் தொடர்பாக வும் தொலைதூரப் பார்வை இருந்தது.

புல்லின சமூகங்களைச் சேர்ந்தவர்களும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பல்வேறு பதவி நிலைகளை வகித்திருக்கிறார்கள்.

சமூக நீதி உணர்வுகளை வலுப்படுத்துவதிலும் முற்போக்கு இலக்கிய சூழலை உருவாக்குவதிலும் கம்யூனிஸ்ட் கட்சி காத்திரமான

(தொடர்ச்சி 5 ம் பக்கம்)

நிபந்தனை அடிப்படையிலாவது விடுதலை பெற்றுத் தருக

## தமிழ் அரசியல் கைதிகள்

## கடிதம்

தமிழ் அரசியல் கைதிகள்,
சிறைச்சாலை
அனுராதபுரம்
15.08.2010

### எங்களின் துயரம், குடும்பங்களின் கவலை

சிறைகளில் பிணை இன்றியும், துரித விசாரணை இன்றியும் இருக்கும் அரசியல் கைதிகளாகிய நாங்கள் தங்களிடம் மனமுவந்து கோருவது எமது நாட்டின் சட்டத்துறை, நீதித்துறைக்கு அமைவாகவும் இன்றைய சமாதான சுமூக சூழ்நிலையினை கருத்திற்கொண்டும் கடந்த காலங்களில் இதுபோன்ற முரண்பாடுகளால் கைது செய்யப்பட்ட கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கியதை நினைவிற் கொண்டு, யுத்தம் முடிவடைந்து ஒரு வருடத்தை தாண்டிய நிலையில், நாங்கள் இன்னும் சிறையில் தவிக்கிறோம். இந் நிலைமையில் எமக்கு நிபந்தனை அடிப்படையிலாவது பிணையினை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இந்த வேண்டுதலை சம்பந்தப்பட்ட கௌரவ அதிதிகளிடம் சமர்ப்பிக்கிறோம்.

இந்த நாட்டில் ஏற்பட்ட இன முரண்பாட்டின் விளைவுகளால் அவசரகால, மற்றும் பயங்கரவாத தடைச்சட்டங்களின் கீழ் சந்தர்ப்ப சூழ்நிலையினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பல வருடங்களாக நாங்கள், எமது குடும்பங்களை பிரிந்தும், இழந்தும் சிறையில் வாடிக்கொண்டிருக்கும் நிலைமையில் நாங்கள் படும் வேதனைகள் ஒருபுறம் அத்துடன் எங்களைப் பிரிந்து வாழும் எமது குடும்பங்கள் உறவினர்கள் படும் சொல்லொணா துயரம், கண்ணீரும், இரத்தமும் கலந்த சோகங்கள் மறுபுறம். அத்தோடு இன்று

எமது குடும்பங்கள் போர்ச் சூழலினால் இருப்பிடங்களையும், குடும்ப உறுப்பினர்களையும், அவயங்களையும் இழந்து போர் வடுக்களை சுமந்து

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

# தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு
## முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களது அரசின் பேராதரவு

### தமிழக அரசு அகதிகள் மறுவாழ்வுத்துறை வெளியிட்டுள்ள விபரம்



### அடிப்படை வசதிகள்

- மாதாந்திர பணக்கொடை,மானிய விலையில் அரிசி,ஆண்டுக்கொருமுறை இலவச துணி மணிகள் மற்றும் பனியன்கள், இரண்டாண்டுக்கு ஒரு முறை பாத்திரங்கள், போர்வைகள் ஆகியவை வழங்கப்படுகின்றன.
- தங்குவதற்கு வீடு, குடி நீர் மற்றும் மின்சாரம்
- குழந்தைகளுக்கு குறிப்பிட்ட வயது ஆனவுடன் வயதுக்கேற்ற பணக்கொடை (12 வயதுக்கு மேல்) மற்றும் மானிய விலை அரிசி (8 வயதுக்கு மேல்) உயர்த்தப்பட்ட விகிதத்தில் வழங்கப்படுகின்றன.

### கல்விக்கான சலுகைகள்

- 12ம் வகுப்பு படிக்கும் இலங்கை தமிழ் மாணவர்களுக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் கல்வி, ,பாடப்புத்தகங்கள், கொப்பிகள், சீருடை, மதிய உணவு மற்றும் பேருந்து பயணச்சீட்டு ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன மற்றும் பிளஸ் 1 வகுப்பு மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கப்படுகின்றன.
- இலங்கைத் தமிழ் மாணவர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி கற்க அனுமதிக்கப்படுகின்றனர்.
- அண்ணா பல்கலைக்கழக பொறியியல் சேர்க்கை கலந்தாய்வு மூலம், பொறியியல் கல்லூரிகளில் பொதுப்பிரிவில் சேர்ந்து கல்வி கற்க அனுமதி வழங்கப்பபட்டுள்ளது.

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)


நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் பக்கம்- 03



கிழக்கின் முதல்வருக்கு துரைரத்தினம் கடிதம் பக்கம்- 04



பக்கம்- 05

மலையகத் தலைமைகள் செய்ய வேண்டியது பக்கம்- 06



கேபியா வைகோவா யார் சொல்வது உண்மை பக்கம்- 07



## கண்ணோட்டம்
Kannottam



# இலங்கையில் ஜனநாயக உணர்வு மட்டம்

இலங்கையில் இனப்பெருமித உணர்வுகள் ஜனநாயக உணர்வு மட்டத்தை கீழ்மைபடுத்தியுள்ளன என்றே கூற வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் ஏகபிரதிநிதித்துவம், ஏகதலைவன் என்ற ஜனநாயக விரோத உணர்வு மேலோங்குவதற்கு இனத்துவ உணர்ச்சிகள் காரணமாக இருந்தனவென்றால் அது மிகையல்ல.

அதேபோல் தென்னிலங்கையிலும் ஒரு நிலைமை ஏற்படுகிறதா ? என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. ஜனாதிபதி பதவி காலத்தை நீடித்தல் பற்றிய கருத்தாடல்கள் எதுவும் நாடு தழுவிய அளவில் மாத்திரமல்ல நாட்டின் தென்பகுதியில் கூட நடைபெறவில்லை.

சமூக அக்கறையுள்ள அரசியல் தலைவர்கள் கல்விமான்கள் இத்தகைய நீடித்தல் பற்றி அதன் சாதக பாதகங்கள் பற்றி கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்டிருந்தாலும் இதுபற்றி பரந்தளவிலான கருத்துரையாடல்களோ வெகுஜன நடவடிக்கைகளோ நிகழவில்லை.

ஒரு நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியின் மன வளர்ச்சியின் குறியீடாக இருப்பது ஜனநாயக சூழ்நிலையே.

இலங்கையில் பல்வேறு தளங்களில் ஜனநாயக மயமாக்கல் நடைபெறவேண்டியிருக்கிறது. ஒன்று இன சமூக தளத்தில்.

அதாவது இலங்கையில் வாழும் எண்ணிக்கையில் சிறுபான்மை தேசிய சமூகங்களான தமிழ், முஸ்லீம், மலையக, பறங்கி இன மக்கள் சமத்துவமாக நடத்தப்படுவதற்கான அரசியல் மாற்றங்கள் இங்கு நிகழ வேண்டும். அதாவது இலங்கை பல்லினங்களின் நாடு என்பதற்கூடாக நாம் இலங்கையர் என்ற நிலையை மக்கள் அடைய வேண்டும்.

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக தாம் இரண்டாந்தர பிரஜைகளாக நடத்தப்படுவதையிட்டு அதிருப்திகள் பெருகியுள்ளன. அதிகாரப்பகிர்வினூடாக இன சமூக கலாச்சார தனித்துவ அடையாளங்களை உறுதிப்படுத்துவதன் ஊடாக அதனை தணிக்க முடியும். அரசியலமைப்பில் இதுவிடயம் தொடர்பாக தீவிரமான மாற்றங்கள் வேண்டும்.

தமிழ் பேசும் மக்களும் ஜனநாயக்தை நேசிக்கும் இந்த நாட்டின் பெரும்பாலான மக்களும் இதனை வலியுறுத்துகிறார்கள்.

அடுத்து நகரத்திற்கும் கிராமத்திற்குமிடையிலான இடைவெளி பணம் படைத்தவர்களுக்கும் ஏழைகளுக்குமான இடைவெளி இவற்றை கரிசனைக்கெடுப்பதில் கையாள்வதில் அரச நிர்வாகம், தகவல் ஊடகங்கள் எந்தளவு நியாயமாக நடந்து கொள்கின்றன என்பதும் முக்கியமான கேள்வியாகும்.

விஷேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி காலத்தை நீடித்தல், தேர்தல், பொலிஸ், நீதித்துறைக்கு சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தல், 13வது திருத்தச் சட்டத்தினை அர்த்தபூர்வமாக முழுமையாக செயற்படுத்துதல் இலங்கையின் விகிதாசார தேர்தல் முறையில் மாற்றங்களை கொண்டுவருதல்.

இன்னோரன்ன விடயங்கள் இலங்கை மக்களின் வாழ்வை இலகுபடுத்துவதாகவும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதாகவும், சமூக பொருளாதார வாழ்வில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் இலங்கையின் சர்வதேச உறவுகளை நெருடல் இலலாததாக சூமுகமாக மாற்றுவதாகவும் அமைய வேண்டும்.

சட்டங்களும் அவற்றில் மாற்றங்களும் மக்களின் ஜனநாயக வாழ்வை உறுதிப்படுத்துவதற்கே தவிர குறிப்பிட்ட விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு குழுவினரின் நலன்களை பாதுகாப்பதற்காக அல்ல.

அத்தகைய விபரீத மாற்றங்கள் வன்முறை, ஊழல், அராஜகம் பாரியளவிலாள மனித உரிமைகள் மீறல் என்பவற்றிற்கே இட்டுச் செல்லும்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் சமாதானம் நிலவும் ஒளிமயமான ஜனநாயக எதிர்காலத்திற்காக என்ன செய்ய முடியுமோ அதனை இந்தத் தருணத்தில் செய்ய வேண்டும்.

1972 அரசியல் யாப்பு அதன் பின்னர் 1978 அரசியல் யாப்பு இந்த நாட்டில் பாரியளவில் இனப்பிரச்சினை வன்முறை யுத்தமாக வெடிப்பதற்கு பங்களித்திருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

வரலாற்றுத் தவறு ஒன்றிற்கு நாம் பொறுப்பாளிகளாக இருந்துவிடக் கூடாது என்ற அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

# கொடுக்கிற தெய்வம் கூரையை பிய்த்துக்கொண்டு கொடுக்குமா?

## எங்களுக்குக் கொடுத்திருக்கிறது என்கிறார்கள் மறவன்புலோ மக்கள்!

**சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பின் வீடமைப்பு மற்றும் கிராம அபிவிருத்தி திட்டங்களைத் தான் இக் கிராமத்து மக்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.**

வீடுகள், சனசமூகநிலையங்கள், பாடசாலைகள், கோவில்கள் என கிராமமே தரைமட்டமாகிவிட்டது. வீடுகள் தோறும் சோலையாய் வளர்ந்து மக்களின் வாழ்வாதாரமாய் இருந்த தென்னை, பனை உள்ளிட்ட பயன்தரு மரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு யுத்தத்தின் கோர வடுக்களை, சுமந்து நின்ற கிராமம் இப்போது மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கிறது. அதற்கு காரணமானவர்களை இவ்வாறு அம் மக்கள் விதந்து போற்றுவதில் வியப்பேதும் இல்லை.



கட்டப்படும் வீடுகளில் ஒன்று



மீளமைக்கப்படும் சகலகலாவல்லி வித்தியாலயம்

1999ம் ஆண்டு புலிகள் நடாத்திய ஊடுருவும் தாக்குதல் காரணமாக உடமைகள் அனைத்தையும் கைவிட்டு, இடம்பெயர்ந்து சென்று நிர்க்கதியான நிலையில் மீண்டும் கடந்த வருடம் மீளக் குடியமர்ந்துள்ள மறவன்புலோ மக்களின் புனர்வாழ்வுக்கு அளப்பரிய உதவிகளை சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்த சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பு என்ற (Swiss Agency for Development and Corperation) தன்னார்வ தொண்டு நிறுவனம் வழங்கி, இக்கிராம மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்நிறுவனத்தின் உதவியுடன் மறவன்புலோ ஜே/298 கிராம சேவகர் பிரிவில் சுமார் 5 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான 308 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதுடன் அவ்வீடுகளின் பயனாளிகளுக்காக ஒவ்வோர் வீடுகளுக்கும் 80 ஆயிரம் ரூபாய் பெறுதியான மலசலகூடம், 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கிணறு என்பனவும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுக்கு மேலாக குறித்த பிரதேசத்தில் இன்னும் ஓரிரு மாதங்களில் ஆரம்பிக்கவுள்ள விவசாய நடவடிக்கைகளுக்காக அங்கு பாரியளவில் சேதமடைந்து காணப்படும் இரண்டு பெரிய மதகுகளை புதிதாக அமைப்பதற்கும் மேற்படி சுவிஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் சலவை தொழிலாளர்களின் தொழில் வாய்ப்பை விருத்தி செய்யும் வகையில் சேதமடைந்த துணி துவைக்கும் கற்களையும், தண்ணீர் தொட்டிகளையும் 25 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைத்துக் கொடுத்துள்ளது.

மேலும், குறித்த கிராம மக்களின் நன்மை கருதி கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடம் ஒன்றும் சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. விசேடமாக அப்பகுதி பிள்ளைகளின் கல்வியினை மேம்படுத்துவதற்காக தரைமட்டமாகிப்போன சகலாகலாவல்லி வித்தியாலயத்தினை புதிதாக அதிநவீன வசதிகளைக் கொண்ட பாடசாலையாக உருவாக்குவதற்கு பல வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடங்களையும் குறித்த நிறுவனம் அமைத்து வருகின்றது. இவை அத்தனையையும் மேற்கொள்ளும் இந்நிறுவனம் அம்மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக கெயார் நிறுவனத்தின் அனுசரணையுடன் தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தும் கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தி, செயற்படுத்தி வருகின்றது.

இந்த தொண்டுநிறுவனம் வழங்கும் உதவிகளை பிரதேச செயலாளர் மற்றும் கிராம அலுவலர் ஊடாக மக்களுக்கு வழங்குவதுடன், வழங்கப்படும் உதவிகளை பயனாளிகள் சரியாகப் பயன்படுத்துகின்றனரா என்பதையும் கண்காணித்து எவ்வாறு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விளக்கங்களையும் அம்மக்களுக்கு, குறித்த நிறுவனம் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றமை முன்மாதிரியானதும், வரவேற்கத்தக்கதுமாகும்.

## மஹிந்த ராஜபக்ஸ 2/3 பெரும்பான்மையுடன் 3 வது ... (1ம் பக்கத் தொடர்ச்சி)

திகாரத்திற்கு இட்டுச் செல்லுமென வலியுறுத்தி வந்த இடதுசாரி கட்சிகள், பல வாதப்பிரதி வாதங்களின் பின்னர் அரசியல் யாப்பின் 18 வது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

18வது திருத்தத்தில், இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என்ற அரசியல் யாப்பின் விதிகள் நீக்கப்பட்டு எத்தனை தடவையும் போட்டியிடலாம் என்ற முறை கொண்டு வரப்பட்டுள்ளது.

2002 இல் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீன வலு குறைக்கப்பட்டு அதற்கான நியமனங்களை மேற்கொள்ளும் அதிகாரம் இந்த அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியிடம் சென்றுள்ளது.

மூன்று மாதத்திற்கொருமுறை ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்க வேண்டும்.

தீவிர அரசியல் யாப்பு மாற்றத்திற்கான கலந்துரையாடல்கள் மக்கள் மத்தியில் நடாத்தப்பட வேண்டும், சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்கள் ஆணையை பெற வேண்டும் என்று ஊடகங்கள், அரசியல் தலைவர்கள், கல்வியாளர்கள், சட்ட வல்லுனர்கள், மனித உரிமைவாதிகள் குரல் எழுப்பினர்.

எனினும் உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசியல் யாப்புத் திருத்தத்திற்கு போதுமானதென தெரிவித்துவிட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஜே.வி.பி சரத் பொன்சேகாவை தலைவராகக் கொண்ட ஜனநாயக தேசிய முன்னணியும் எதிர்த்து வாக்களித்துள்ளன. ஐ.தே.க பாராளுமன்றத்தை பகிஷ்கரித்தது.

அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை ஆதரித்து ஸ்ரீ.ல.சு.க யினரும் எதிர்த்து ஐ.தே.க, ஜே.வி.பி யும் வீதிகளில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சிகள் பலவீனமடைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

குறிப்பாக சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் அரசியல் யாப்பு மாற்றம் பற்றிய கரிசனை குறைவாகவே இருந்தது. இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்ற போக்கே காணப்பட்டது.

அரசியல் யாப்பு மாற்றம் மாகாணங்களுக்கான அதிகாரங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் அரசியல் மாற்றம் என்பது அரசியல் அதிகாரங்களை சமூகங்களிடையே பகிர்வதற்காக, தேர்தல் முறையை வெவ்வேறு இன சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் விதமாக மேற்கொள்ள வேண்டுமென்பது வெளிப்படை. ஆனால், அது நடைபெறவில்லை.

இலங்கையின் வரலாற்றிலேயே மஹிந்த அளவுக்கு வல்லமை வாய்ந்த ஆட்சித் தலைவர் இருந்திருக்கவில்லை என்கிறார் பிரதமர். இலங்கையின் சிறுபான்மைத் தேசிய இனங்களின் கட்சிகளெல்லாம் எதிர்க்கட்சியில் இருப்பதால் இனியும் லாபமில்லை அரசாங்க வண்டியில் ஏறுவதே பயன் என்று மாறினால் அவர் இலங்கையிலென்ன உலக வரலாற்றிலே கூட அதிக வல்லமை மிக்கவராவார்.

எல்லாம் சரிதான் இந்த ஆனை போகும் வேகத்தில் அடி சறுக்காது இருக்க வேண்டும்! அரசியலில் ஓடும் வேகத்தில் சுலபமாக ஏறி விடுவர் பலர். ஆனால் கவிண்டால் மீண்டும் ஏறுவது எல்லாவற்றையும் விட மிகக் கடினம் என்பது அநுபவம்.


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:–

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118

# பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு

## கட்சி பேதமின்றி பிரதேச வேறுபாடுகளின்றி செயற்பட வேண்டும்

*துணை சபாநாயகர் மு. சந்திரகுமார் (ஈழமக்கள் ஜனநாயக கட்சி)*



இந்த நாட்டில் இனத்தின் பேரோலும், மொழியின் பேரா லும், மதத்தின் பேரோலும் பிர தேசங்களின் பேரோலும் நீதி பாரபட்சமாயிருக்கிறது. எங்க ளுடைய மனதில் குறைபா டாக இருந்த நீதி காரணமா கவே நம் நாடு பேரழிவுக ளைக் கண்டது. இந்த நீதிக் குறைபாட்டினால் பல உயிர் கள் பலியாகியிருக்கின்றன.

இந்த நாட்டில் இதுவரை தீர்க்கப்படாதிருக்கும் பல பிரச்சினை களுக்கு எங்கள் மனங்களிலும், எமது சமூக வழக்கத்திலும் இருக்கும் நீதி குறைபாடுதானே காரணம்? இந்த குறைபாட்டோடு தான் கடந்த 60 ஆண்டுகளாக ஆட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த நீதி குறைபாடுகள் வேண்டாம். இதனை நாங்கள் எல்லோரு மாக இணைந்து போக்குவோம். அதற்கு இந்த காலகட்டத்தை நாம் எல்லோருமாக பயன்படுத்திக் கொள்வோம். இந்த சந்தர்ப்ப த்தை நாட்டின் முன்மாதிரியான காரியங்களுக்காக பயன்படுத்திக கொள்வோம்.

போர் முடிந்த பிறகு வட பகுதியில் இன்னும் மக்கள் பல பிரச் சினைகளுக்கு முகம் கொடுத்தபடியே இருக்கின்றார்கள். இங்கே அவசரகாலநிலை பற்றி விவாதிக்கப்பட்டது. ஆனால் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் அடுத்து உருவாகவுள்ள அனர்த்த நிலைபற்றி சிந்திக்கிறேன். அந்த மாவட்டங்களில் மீளக்குடியே றிய மக்கள் இன்னும் சில நாட்களில் பெய்யப்போகும் பருவ மழையினால் பெரிதும் பாதிக்கப்பட போகின்றார்கள். அந்த மக் களுக்கான வீட்டு வசதி பூரணப்படுத்தப்படவில்லை.

தற்காலிக வீடமைப்பு முயற்சிகள் இன்னும் முழுமைபடுத்தப்ப டவில்லை. இதனால் மக்கள் பெரும் அனர்த்தத்திற்குள் சிக்கப் போகிறார்கள். அங்கே பல இடங்களிலும் மக்கள் தங்குவதற்கு பாடசாலை கட்டடங்கள் கூட சீராக்கப்படவில்லை. மழைகாலத் தில் பல பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில்தான் இருக்கி ன்றன. ஆகவே எதிர்வரும் பருவ மழைக்காலம் என்பது மிகவும் நெருக்கடியைத் தரும் ஒரு அபாய நிலைமையே காணப்படுகிறது.

இது அரசாங்கத்துக்கு நெருக்கடியைத் தரும் ஒரு முக்கிய விட யமாகும். அகதிகளின் பிரச்சியையும் மீள் குடியேற்ற விவகாரமும் சர்வதேசத்தின் கவனத்துக்குரியவை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஏந்த உள்நாட்டு நெருக்கடியும் ஒரு கட்டத்துக்கு மேல் சர்வதேச த்தின் கவனத்தைப் பெறும். அது அடுத்த கட்டமாக சர்வதேச அழுத்தமாக மாறும் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஆகவே உருவாக இருக்கும் எந்த அனர்த்தத்துக்கும் நாம் இட மளிக்கத் தேவையில்லை.

கூடிய விரைவில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை ஒரு இய ல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான பொறுப்பை இந்த மன்று, இந்த நாடு, நாட்டிலுள்ள அனைவரும் கட்சி பேதமின்றி பிதேச வேறுபாடுகளின்றி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அவர்களுக்கான வீட்டு வசதி, மீள்குடியேற்றத்தை இந்த ஆண் டுக்குள் முழுமைப்படுத்துவது, தடுப்பு முகாம்களிலுள்ளோரின் விடுதலை, அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள், தங்கள் பிரதேசங்களில் வாழ்வதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத் திக் கொடுப்பது போன்ற முக்கியமான நடவடிக்கைகளுக்காக நாம் எல்லோரும் கூடி முயற்சிப்போம். இவ்வாறு நீதித்துறை சட்டமூலத்தின் மீது உரையாற்றிய துணை சபாநாயகர், நாடாளு மன்ற உறுப்பினர் கௌரவ முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

# நல்லிணக்க ஆணைக்குழு என்ன செய்ய வேண்டும் ?



ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழு அல்லது உண்மையை கண்டறியும் குழு வழமை யாக எமது நாட்டில் இத்தகைய குழுக்களுக்கு நேர்ந்தது போன்ற நிலைமையை எய்திவிடக் கூடாது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் தீர்மானங்கள் எட்டப்பட்ட உடன்பாடுகள் அனைத்தும் இன்று அர்த்தமிழந்து போனது போன்ற நிலைமை காணப்படுகிறது.

நாம் கால நதியில் கடதாசி கப்பல்களை விட்டு விளை யாடிக் கொண்டிருந்ததால் பல வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டுவிட்டது என்பதை மனதில் இருத்தியாக வேண்டும்.

மனிதகுல வரலாறு முழுவதும் நீதி நியாயங்கள் பாரபட்ச ங்களை ஒழித்தல் பற்றிய கருத்துக்களும் போராட்டங்க ளும் இடையறாது நிகழ்ந்துதான் வந்திருக்கின்றன.

இலங்கை சுதந்திரம் பெற்று 62 ஆண்டுகளில் 40 ஆண்டு கள் வன்முறை கிளர்ச்சி யுத்தம் என்று இருந்ததை நாம் மறந்துவிட முடியாது

எமது நாட்டின் இளைய சமுதாயம் அமைதி இழந்து காணப்பட்டது. இது ஏன்? இதற்கு என்ன தீர்வு என்று கண்டறியப்படல் வேண்டும். அது மனிதகுல நியாயங்களு க்கு, நியமங்களுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும். மானிட தர்மமே இங்கு அளவுகோலாக இருக்க முடியும்.

யுத்தம் புரிந்தவர்களுக்கு அப்பால் சாதாரண மக்களின் உயிரிழப்பு நாடளாவியளவிலும் உலகளாவிய ரீதியிலும் மிகுந்த கரிசனைக்குரியது.

உயிர்வாழும் உரிமை, கருத்துச் சுதந்திரம், சமூக பாதுகா ப்பு, சமூகங்களிடையே நல்லிணக்கம் என்பவற்றை உறு திப்படுத்துவதற்கு நாம் இங்கு என்ன செய்ய வேண்டும் என்பது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

இங்கு உண்மைகளை கண்டறிவது முதன்மையானது. சிறுபான்மை சமூகங்கள் இந்த நாட்டில் இரண்டாந்தர பிரஜைகள் என உணர்வதை நடைமுறை ரீதியில் எவ் வாறு மாற்றுவது, மனித உரிமைகளையும், ஜனநாயகத்து வம், பன்மைத்துவத்தையும் எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பதே இங்கு முக்கிய மானதாகும்.

சிறுபான்மை மக்களின் வாழ்க்கையில் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் உறுதிப்படுத்துவதே உண்மையை கண்டறியும் குழுவின் இலக்காக இருக்க முடியும்.

# தமிழர்களுக்கு பயமும் சந்தேகமும் இருக்கிறது

*ஜீ.ரி. லிங்கநாதன் (தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்)*



கடந்த கால அனுபவங்களை கற்றுக்கொள்ளவும், தேசிய நல் லிணக்கத்தை ஏற்படுத்தவுமென ஜனாதிபதியால் அமைக்கப்பட்டு செயற்பட்டுவரும் ஆணைக்குழுவின் விசாரணைகள் வவுனியா மாவட்ட செயலகத்தில் (14.08.2010) இடம்பெற்ற போது புளொட் மத்தியகுழு உறுப்பினரும் வவுனியா நகரசபை எதிர்கடசித் தலைவருமான ஜி.ரி லிங்கநாதன் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தார். அவர், நடந்தவைகளை மறந்து இனிவரும் காலங்க ளில் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற கருத்தை ஆணைக் குழுவின் தலைவர் இங்கு கூறியிருந்தார். உண்மையில் நாமும் அதைத்தான் விரும்புகின்றோம். இருந்தாலும், மறைந்த இடதுசாரி தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர். டி. சில்வா கூறியிருந் தார்கள் இந்த நாடு இரு மொழி பேசுவதாக இருந்தால் ஒரு நாடாகவும், ஒரு மொழி பேசுவதாக இருந்தால் இரு நாடுகளாகவும் ஆகும் என்று. இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், நட ந்தவைகளை மறப்பதென்பது இலகுவான விடயமல்ல. தமிழ் மக்கள் கடந்த 30 ஆண்டுகளாக மிகுந்த இன்னல்களுக்கு மத் தியில், இன்றைக்கு நிர்க்கதியான நிலையில் இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

இன்று தமிழ் மக்களை பொறுத்தவரையில் ஒன்று கௌரவமாக எல்லா மக்களும் வாழக்கூடிய அரசியல் தீர்வு முன் வைக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது. அடுத்ததாக இந்த யுத்தத தின் மூலம் இடம்பெயர்ந்து தங்களுடைய அன்றாட வாழ்வைக் கூட வாழ முடியாது இருக்கின்ற மக்களை சிறந்த முறையில் வாழ வைக்க வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அடுத்து பல ஆண்டுகளாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர் யுவதிகளை அவர்களது விசாரணை களை முடித்து விடுதலை செய்ய வேண்டும்.

இறுதியாக கூற வேண்டியது சுதந்திரத்திற்கு பின்னிருந்தே வட க்கு கிழக்கில் அத்துமீறிய குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டமை யும் இந்த இனப்பிரச்சினைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று அதன் தொடர்ச்சியாக இறுதி வரை அத்துமீறிய குடியேற்றங்கள் தொடர்பில் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான பயமும் சந்தேக மும் இருந்து கொண்டே வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்திலும் முறிகண்டி பகுதியிலும் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடைபெற இருப்பதாக் இணையத்தளங்களிலும், பத்திரிகை வாயிலாகவும் அறிகிறோம்.. இதையிட்டு ஒவ்வொரு தமிழ் மகனும் ஓர் அச்ச மான சூழ்நிலையில் இருக்கின்றான். இந்த விசாரணைக்குழு இந்த விடயத்தில் தலையிட்டு தீர்வுகான வேண்டும். ஜனாதிப தியை பொறுத்தவரையில் யுத்தத்தை முடித்துவிட்டார் என்பதற்கு அப்பால் இந்த நாட்டில் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டு மென செயற்படுவதாக நாம் நம்புகின்றோம்.

விவாதத்திற்கு சொல்லலாம். வெள்ளவத்தையில் ஒரு தமிழ் மகன் தொடர்மாடியில் வீடு வாங்க முடியுமென்றால் வேறு இன மக்கள் ஏன் கிளிநொச்சியில் வாங்க முடியாது என்று. நாம் இலங்கையர் என்ற வகையில் எந்த பிரதேசத்திலும் வாழ முடி யும். ஆனால், தமிழர்கள் வெள்ளவத்தையிலோ, பம்பலபிட்டி யிலோ வாழ்வதற்கான முயற்சியில் ஈடுபடும்போது அரசாங்கம் உதவியோகபூர்வமாக எந்த வித உதவியும் முயற்சியும் செய்ய வில்லை என்பது உண்மை. இருந்தாலும் முறிகண்டி, கிளிநொச்சி போன்ற பகுதிகளில் இடம்பெறும் விடயங்களுக்கு அரசாங்கம் பின்னணியில் செயற்படுவதாக நாம் சந்தேகிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடு ஜனாதிபதியின் இன ஒற்றுமைக்கும் சுபீட்சமான எதிர்காலத்திற்குமான செயற்பாட்டிற்கு முட்டுக்கட்டை யாக அமையும் என்பதை ஆணித்தரமாக தெரிவிக்க விரும்பு கிறேன் என ஜீ.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

### புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவரும் 10,000 பேரையும் விடுவிக்க வேண்டும்

# நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் ஆனந்தசங்கரி சாட்சியம்

தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தமிழ் மக்களின் இன்னல்கள் குறித்து எடுத்துரைததார்.

- பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கல்
- வடக்கில் முழு சிவில் நிர்வாகம் ஏற்படுத்தல்

ஆகிய விடயங்களை அவர் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தினார்

தடுத்து வைக்கப்பட்டுப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவரும் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் 10,000 பேரையும் விடு வித்து அவர்களை சமூகமயப்படுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜே. வி. பி. உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வளித்து விடுவித்ததைப்போல், புலி உறுப்பினர்களையும் விடுவிக்க வேண் டுமென்று குறிப்பிட்ட அவர், குழுவொன்றை அமைத்து அவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துகொண்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வடக்கில் மக்களின் சுதந்திரமான இயல்பு வாழ்க் கையை உறுதிப்படுத்து வதற்காக அங்கு சிவில் நிர் வாகத்தை முழுமையாக ஏற்படுத்த வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய ஆணைக் குழுவின் பகிரங்க அமர்வில் ஆனந்தசங்கரி நேற்று சாட்சியமளித்தார். குழுவின் தலைவர் - முன்னாள் சட்ட மா அதிபர் சீ.ஆர்.டி. சில்வா தலைமையில் நடைபெற்ற விசாரணை யில் சுமார் 45 நிமிடம் சாட்சியமளித்த கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, குழுவின் கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் பேரும் எமது அப்பாவி பிள்ளைகள். அவர்கள் தவறாக வழிநடத்தப்பட்டு இந்த நிலைக்கு ஆளாகியுள்ளார்களே தவிர எந்தக் குற்றமும் அறியாதவர்கள்.



அவர்கள் உடலால் சரணடை திருந்தாலும் உணர்வால் சரண டையவில்லை. அவர்கள் அப்பா விகள். அவர்களைப் பெற்றோரி டம் ஒப்படைத்தால், அவர்கள் தங்கள் பிள்ளைகளை சமூகமய ப்படுத்துவர்கள்.

யுத்தம் முடிவடைந்திருக்கும் நிலையில் எமது மக்கள் சுதந் திரமாக அவர்களின் சொந்த மண்ணில் வாழவேண்டும். இது எமது நாடு. எமது மண். நாம் இந்த நாட்டையே நேசிகின் றோம். நான் இந்த நாட்டையே பிரதிநிதித்துவப் படுத்துகிறேன்.

வடக்கில் முழுமையாக சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும். மக்கள் சுதந்திரமாக வாழும் சூழல் ஏற்படாத வரை நல்லிண க்கத்தை ஏற்படுத்த முடியாது. எமது பிரச்சினை 50 வருடம் பழமை வாய்ந்தது. இன்னமும் தீர்வு காணப்படவில்லை என்று குறிப்பிட்ட ஆனந்தசங்கரி பாதிக்கப்பட்டவர்களுக்கு குறிப் பிட்ட தொகை நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழ், சிங்கள மொழிக ளைப் பாடசாலை மட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்றது டன் ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதற்காக இந்தியா விலிருந்து ஆசிரியர்களைத் தருவிக்கலாம் என்றும் யோசனை தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் முன் பின்னர் சாட்சியமளித்த எஸ்.எல். குண சேகர, "புலிகள் இயக்கத்திற்கும் ஜே. வி. பி. யினருக்கும் வேறுபாடு கிடையாது. இவர்களும் வன்முறையில் ஈடுபட்டார்கள். ஆனால், இரு அமைப்புக்களின் ஒழுங்கு நடைமுறையே மாறு பட்டிருந்தது" என்று சுட்டிக்காட்டினார்.

# கிழக்குமாகாணத்தில் அரச காணிகள் வழங்கப்படுவது

## வரையறை செய்யப்படுவதோடு பிரதேச முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமை வேண்டும்

கிழக்கின் முதலமைச்சருக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான இரா. துரைரத்தினம் கடிதம்



கிழக்கு மாகாணத்தில் அரச காணிகள் அநேகமாக இயற்கை வளமான காடுகளைக் கொண்டவையாக இருந்தன. 30 வருடங்களுக்கு மேலாக நிகழ்ந்த யுத்த அழிவுகளின் காரணமாக இக் காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. அப்பகுதிகள் பெரும்பாலும் யுத்தப்பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்ததால் இப்பகுதிகளில் வயல் செய்து வாழ்ந்தவர்களோ அல்லது காட்டு வளங்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த எவருமோ அப்பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர். அப்பகுதிகளில் தொழில்கள் புரிந்து வந்த மக்கள் ஆண்டாண்டு காலமாக பல தலைமுறைகளாக வைத்திருந்த நிலங்களை இழக்க வேண்டியவர்கள் ஆனார்கள்

கடந்த காலங்களில் மாறிமாறி வந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்து வந்த இனப்பாரபட்சமான கொள்கைகளின் காரணமாகவும் அரசபடைகளின் யுத்த நடவடிக்கைகளின் காரணமாகவும் மட்டுமல்லாது புலிப்பயங்கரவாதிகளின் கொலை மற்றும் ஆட்களைக் கடத்திப் பணம் பறித்தல் என நிகழ்ந்த அச்சுறுத்தல்கள் காரணமாகவும் அநேகமான வடக்கு-கிழக்கு தமிழ் வர்த்தகர்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் பொருளாதார முதலீடுகளை செய்வதில் தாமதமும் தயக்கமும் காட்டினர். அவர்கள் தமது பாரம்பரிய வாழ் நிலங்களின் வளர்ச்சிக்கு உரிய பொருளாதார முதலீடுகளை செய்வதற்கு அரசோ புலிகளோ எந்த நம்பிக்கையையும் வழங்கவில்லை. மாறாக அவர்களை அச்சுறுத்துவதிலேயே அக்கறை காட்டினர். இவற்றின் காரணமாக பெருந்தொகையான திறமைசாலிகளும், முதலீட்டாளர்களும் வெளிநாடுகளுக்கும் தென்னிலங்கைப் பகுதிகளுக்குமே இடம் பெயர்ந்து வாழ்வைத் தேடிக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

தற்சமயம் யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது அனைவரும் அவரவது பகுதிகளுக்கும் மற்றும் இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் போய்வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நல்ல சூழ்நிலையில் தற்சமயம் வடக்கு-கிழக்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் பொருளாதார முதலீடுகளை மேற்கொள்வற்கு ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். பல புதியவர்கள் முதலீடுகளை ஆரம்பித்துள்ளனர், ஆரம்பிக்கவுள்ளனர். ஆனால், இவர்களுக்கு அரச நிர்வாகங்கள் தொடர்பாகவும், அரசியல் ரீதியான விடயங்களிலும் மிகக்குறைந்த அனுபவங்களே உண்டு. இவர்களுக்கும் 40 - 50 வருடங்கள் அநுபவங்கள் கொண்ட தென்னிலங்கை வர்த்தக மற்றும் உற்பத்தித் துறை முதலீட்டாளர்களுக்கும் இடையில் மடுவிற்கும் மலைக்கும் உள்ளது போன்ற வித்தியாசம் உள்ளது. அனுபவம் குறைந்த புதியமுதலீட்டாளர்கள் தமது துறைகளை சரியாக பற்றிக் கொள்வதற்கு சிலகால அவகாசம் அவசியமாகும்.

இந்த நிலைகாணப்படும் இவ்வேளையில் வளர்ச்சியடைந்த தென்னிலங்கை நிறுவனங்களும், வெளிநாட்டு நிறுவனங்களும், முதலீடு செய்வதில் போட்டிபோடுகின்றன. அரசவளங்களை இலகுவாக கைப்பற்றக் கூடியவர்களும் அரசியல் பலங்களுடன் நெருக்கமான தொடர்புள்ளவர்களுமே மிகவும் விரைவாக கிழக்கு மாகாணத்திற்கு வந்து முதலீட்டை ஆரம்பிக்கின்றனர். இதனால் எமது பிரதேசத்தில் உள்ளவர்கள் முதலீடு செய்வதற்கு தயாராகும் முன்னரே எமது வளங்கள் கொண்ட அரசகாணிகள் அந்நியர்களின் கைகளுக்கு போய்விடும் ஆபத்துக்கள் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அரசின் அதிகாரத்தில் உள்ளவர்களுடன் செல்வாக்கான உறவுகளைக் கொண்டவர்களுக்கும், சட்டத்தில் உள்ள ஓட்டைகளை பாவித்து உயர்மட்ட அழுத்தத்துடனும் ஆதரவுடனும் குறுக்குவழியில் சென்று அரச காணிகளைக் கைப்பற்றுபவர்களுக்கே அரசாங்கமும் ஆதரவாக உள்ளமை இங்கு வெளிப்படையாகும்.

எனவே எமது பிரதேசத்தில் உள்ளவர்களுக்கே எமது பிரதேச வளங்கள் கொண்ட அரசகாணிகளை வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஒரு சிலரின் தனிப்பட்ட நலனுக்காக எமது பாரம்பரிய பிரதேசத்தின் வளமுள்ள காணிகளை அந்நியர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுக்க முடியாது. இதற்கு உடந்தையாக இருப்பவர்கள் தமது மக்கள்-விரோத திட்டங்களைக் கைவிட வேண்டும். திறந்த வெளிக்கொள்கை எல்லா விடயங்களுக்கும். ஏற்புடையதல்ல இது பிரதேசத்தின் - மாவட்டத்தின், மாகாணத்தின், நாட்டின் இறைமையைப் பாதிக்கும். இப்படியானால் அரசு தென்னிலங்கை பகுதியில் இதைவழங்க வேண்டும் அமைச்சர்களின் நலனுக்கும், சில வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நலன்களுக்கும் ஒரு சில அதிகாரிகளின் மற்றும் தரகர்களின், நலன்களுக்காக எமது பிரதேசத்தின் வளங்கள் பறிபோவதையும் சூறையாடப்படுவதையும் பார்த்துக் கொண்டு நாம் அந்நியர்களிடம் கையேந்தி நிற்பவர்களாக ஆக்கப்படும் நிலையை ஏற்கமுடியாது. இந்தப் போக்குகளை ஏற்று மண்டியிடுபவர்களாக நாம் இருக்க முடியாது.

இவை எமது வளங்கள், இந்தப் பிரதேசத்தின் பாரம்பரிய மக்களின் சொத்து இதற்கு உரமிட்டவர்கள் பெரும்பாலும் தமிழ் மக்களே. இதை பாதுகாப்பதற்காக பல்லாயிரக் கணக்கான உயிர்களையும், உடைமைகளையும் பறிகொடுத்தவர்கள் தமிழ் மக்கள். இதில் எமது உயிர் வாழ்க்கைக்கான இறைமையும் உண்டு. இது தொடர்பாக மத்திய மற்றும் மாகாண அரசுகள் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

கிழக்கு மாகாணசபையில் இது தொடர்பாக நான் பல தடவைகள் விவாதித்தும் காது கேளாத விதமாகவும், கண்மூடித்தனமாகவும் தொடர்ந்து அரச காணிகள் அந்நியர்களுக்கு வழங்கப்படுவதும் இது பற்றிய முறைப்பாடு ஏதும் தமக்கு வரவில்லை என முதலமைச்சர் கூறுவதும் என்னை வியப்புக்கும், பல்வேறு கேள்விகளுக்குள்ளும் ஆழ்த்தியுள்ளது இதன் காரணமாக கிட்டத்தட்ட நான் அறிந்தவரையில் காணிகள் வழங்கப்படும் விதங்களையும் விபரங்களையும் தெரியப் படுத்த வேண்டியவனாக உள்ளேன். குறிப்பாக:

01. திருகோணமலை மாவட்டத்தில் இறக்கக்கண்டியில் இருந்து புடவைகட்டு வரையான கடற்கரை பிரதேசம் 1500 ஏக்கருக்கு மேற்பட்ட அரச காணிகள் சுற்றுலா அபிவிருத்திக்கென வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

02. திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளிப் பிரதேச செயலகப் பிரிவில் 1400 ஏக்கர் காணி உப்பு உற்பத்தி செய்யப்படுவதற்கென வழங்கப்பட்டுள்ளது.

03. மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவில் சின்னப் புல்லுமலை முருகன் கோயில் முன்வீதிப் பக்கம் 3 ஏக்கர் மலை வழங்கப்பட்டுள்ளது. இதில் சரியான நடைமுறை விதிகள் ஏதும் பின்பற்றப்படாமல் பாரியமலையை உடைத்து விற்பனை செய்கின்றனர்.

04. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இந்துக்களின் மிகப் புனிதப் பிரதேசமான கன்னியா வெந்நீர் ஊற்று அமைந்துள்ள காணிப்பிரதேசம் சிங்கள முதலாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

05. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலகப் பிரிவில் 212சி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பெரியதீவு சல்லித்தீவு (பனிச்சக்கேணிப்பகுதி) ஆகிய வற்றில் உயிரியல் ஆய்வு மையம் அமைப்பதற்கென காணிகளைப் பெற்று தற்போது உல்லாச விடுதிகள் கட்டுவதற்கென தனியாருக்கு வழங்கப்படப்போவதாக அறிகின்றேன்.

06. மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள காண்டியன்குளம் கால் நடைக்குரிய மேய்ச்சல் தரையானது அன்னாசிப்பழத் தோட்டம் அமைக்கவென 1000 எக்கர் காணி ஈரான் கம்பனிக்கு வழங்கப்பட உள்ளது..

07. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஈச்சிலம்பற்றை பிரதேச செயலாளர் பிரிவில் சோமாவதி புனிதப் பிரதேசத்தில் இருந்து சேருவெல புனித பிரதேசத்திற்கென அடர்ந்த காடுகள் ஊடாக வீதியமைக்கப்பட்டு இதன் இருபக்கமும் மீள்குடியேற்றம் என்னும் போர்வையில் புதிய குடியேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன.

08. திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கந்தளாய் பகுதியில் 15 ஆயிரம் எக்கர் காணி வாழைப்பழச் செய்கைக்கென அந்நியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

09. மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் மகாவலி அபிவிருத்தி என்னும் போர்வையில் புனானையில் உள்ள வாழைச்சேனை காகித ஆலைக்கு சொந்தமான காணிகள் 1500 ஏக்கருக்கு மேற்பட்டவை பிற மாகாணங்களைச் சேர்ந்த தனியார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

10. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் சுங்காங்கேணி, சேத்துக்குடா, காயான்கேணி மற்றும் பனிச்சங்கேணியில் 400 ஏக்கர் களப்புப்பகுதி இறால் வளர்ப்பிற்கென வழங்கப்பட உள்ளது.

11. மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதியில் முகத்துவாரப் பகுதி பாலமீன்மடு நாவலடி கல்லடி இவைகள் மீன்பிடிக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளாகும். ஆனால் இப் பகுதிகளில் அரச மற்றும் தனியார் காணிகளில் வெளிநாட்டு நிறுவனத்திற்கு ஐந்து நட்சத்திர உல்லாச விடுதிகள் கட்டுவதற்கு முயற்சிகள் நடப்பதாக தெரியவருகின்றது.

12. மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் குடும்பிமலை, மியான்கல் பகுதியில் 1000 ஏக்கர் விவசாய நிலங்கள் தனியார்களுக்கு விவசாயம் அல்லாத முதலீடுகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

13. பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மண்முனைத்துறை பகுதியில் உள்ள தீவு பறவைகளின் சரணாலையமாகும். இங்கு மீன்கள் தங்கி நின்று முட்டையிடுவதற்கும் மீன்கள் பாதுகாப்பாக இருப்பதற்கும் வகையாக மண்முனைத்துறையை நோக்கி வெள்ளம் போவதை தடுக்கும் மேடாகவும் இருக்கின்றன இதையும் ஹோட்டலகள் கட்டுவதற்கு வெளிநாட்டு கம்பனிகளுக்கு நீண்டகால குத்தகைக்கு விடுவதற்கான முயற்சிகள் நடப்பதாக அறிகின்றேன்



14. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எல்லைக் கிராமமான 213சி கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த தோணிதாட்டமடு, புஞ்ஞாங்கேணி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த நிலங்கள் பொலநறுவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

15. மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கெவிழியாமடு, கச்சைகொடிசுவாமிமலை ஆகிய வற்றில் உள்ள தமிழர்களினது காணிகள் அனுமதி அற்றமுறையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலரால் அத்துமீறி வீடுகள் கட்டப்படுகின்றன இந்தக் காணிகள் வழங்கப்பட்ட முறையில் காணிவழங்கும் நடைமுறை விதிகள் எதுவும் பின்பற்றப் படாமை, பிரதேச முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படாமை, திட்டமிட்ட அத்துமீறிய குடியேற்றங்கள் நடத்தப்படுகின்றமை போன்றவைகளை கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்கள் விரைந்து தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் இல்லாவிடில் தவறானவர்களுக்கு இக்காணிகளை வழங்குவதில் மாகாணசபையும் உடந்தையாக உள்ளதா என்னும் வினாவிற்கு முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டியேற்படும்.

இரா. துரைரத்தினம்

# சுதந்திரம்

**தி. ஸ்ரீதரன் பொதுச்செயலாளர், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்**

மனித குலத்தின் அடிநாதமே சுதந்திரம் தான். சுதந்திரம் மானிடத்தின் பிறப்புரிமை எனச் சிலாகிப்பர். அந்தப்பிறப்புரிமையை யாரும் பறித்துவிட முடியாது.

மனிதர்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப் படுகையிலேயே ஆக்க சத்தி பிரவாகிக் கிறது. இலங்கையில் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக சிறுபான்மையினங்களின் மக்களது குறிப்பாக தமிழரது சுதந்திரம் மறுக்கப்பட்டுவந்திருக்கிறது.

தமிழர்கள் தமது உரிமைகளுக்காக குரல் கொடுத்தபோது அவர்களின் வாழ்வின் மீது பயங்கரவாத- அவசரகாலச்சட்டங்கள், இனக்கலவர- அரசியல்வன்முறைகள், இராணுவபிரசன்னங்கள் திணிக்கப்பட்டன.

உண்மையில் சமூக பாரபட்சங்கள் வரலாற்று அநீதிகளுக்கு தீர்வு காணும் முறை இதுவல்ல என்பது பகுத்தறிவுள்ளவர்களுக்கு விளங்கும்.

பிரச்சனைகள் உருவானதற்கான காரணிகளைக் கண்டறிந்து அதற்குத் தீர்வு காண்பதே முறையானதாகும்.

அதைவிடுத்து வன்முறை என்பது எதிர்வன்முறைகளுக்கும் சமூகப் பேரழிவுகளுக்குமே வழிவகுக்கும். இதனை அனுபவத்தில் கண்டு விட்டோம்.

இந்த வன்முறையினாலும் பேரழிவினாலும் சமூகங்கள் என்ற ரீதியில் யாருக்காவது பிரயோசனம் இருந்ததா? என்றால் அதுதான் இல்லை. அதாவது சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள் என்று பார்க்க வேண்டும்.

பெரும்பான்மைச்சமூகத்தின் ஒரு பகுதியினர் தற்காலிகமாக வெற்றிப்போதையில் திளைக்கிறார்கள்.

சிறுபான்மைச்சமூகத்தின் ஒருபகுதி மனம் புழுங்கியபடி வாழ்கிறது.

இது சமூகப்பயன் இல்லை. இது லாகிரிப பொருறைப் பாவித்தவருக்கு வரும் கிறக்கம். மற்றது மன வீழ்ச்சி.

இருக்கும் சமூக கட்டமைப்பின் மீதான வெறுப்பை சிங்கள இளைஞர்கள் வெளிப்படுத்தாமல் இல்லை. அவர்கள் 1970 களின் முற்பகுதியிலும் 1980 களின் பிற்பகுதியிலும் கிளர்ச்சிகளை நடத்தினார்கள்.

சமூக அநீதிகள் களையப்படாதவிடத்து காரிருள் சூழ்நிலை எதிர்காலத்திலும் ஏற்படலாம்.

எனவேதான் வாழ்வின் தருணங்களில் தளங்களிலெல்லாம் சுதந்திரத்தின் ஓவியங்களை வரைந்திடுவோம்.

இனரீதியான பாரபட்சங்கள் வறுமை இவற்றை ஒழிக்க எம்மை நாம் அர்ப்பணிப்போம்.

தொழிலாளர்கள் ,விவசாயிகள், மீனவர்கள், இளைஞர்-யுவதிகள் மானிடத்தின் அனைத்து பகுதியினர் மீதும் சுதந்திரத்தின் முத்திரையைப் பதிப்போம்.

இங்கு மனிதர்கள் வாழ முடியாத உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு இடமில்லை.

சோதனைச்சாவடிகளுக்கு இடமில்லை.

காலாவதியான பயங்கரவாத, அவசரகாலச் சட்டங்களுக்கு இடமில்லை.

முட்கம்பி வேலிகளுக்குப் பின்னாலும் சிறைக் கூடங்களிலும் வாழ்க்கை என்ற அவலங்களுக்கும் இடமில்லை.

மனச்சாட்சியின் சுதந்திரத்தின் மீது யாரும் விலங்கிடமுடியாது. காணாமல் போவதற்கும் வன்முறைகளுக்கு அநியாய மரணங்களுக்கு இடமில்லை.

நற்சிந்தனைகளும் ,அறிவொளி வீசும் கண்களும் சமூகபொருளாதாரவாழ்வை மேம்படுத்துவது மேலும் மேலும் முடிவற்று சுதந்திரமானதாக வாழ்வை மாற்றுவதே இங்கு இடையறாத தேடலாக இருக்கும்.

அதிகார அகங்காரத்திற்கும் சுதந்திரத்திற்கு மிடையிலான போராட்டம் முடிவற்றது.

இதனூடாகத்தான் வாழ்வு செம்மைப்படுத் தப்படுகிறது.

# உலக தரிசனம்

- பாகிஸ்தானில் இரண்டு கோடிப்பேர் வெள்ளத்தின் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். பாகிஸ்தானின் ஐந்தில் ஒரு பகுதி நிலம் தண்ணீரில் மூழ்கியது. எட்டு இலட்சம் பேர் எதுவித தொடர்புமற்ற நிலையில் அகப்பட்டுள்ளார்கள். சிந்து நதியின் சீற்றம் இன்னமும் தொடர்கிறது. புயங்கரவாத குண்டு வெடிப்புகளால் அல்லற்பட்டுகொண்டிருக்கும் பாகிஸ்தானை மழை வெள்ளமும் விடுவதாக இல்லை.

- ரஷ்யாவில் வரலாறு கண்டிராத வெயில். மாதாந்தம் 700 பேர்வரை மரணமாகிறார்களாம். அந்கு பெருங்காடுகள் தீப்பிடித்து எரிகின்றன. இதனால் ரஷ்யாவில் உணவுத் தானியங்களின் எற்பத்திகள் வுழ்ச்சி ஏற்படும் என அறிவிக்கப்பட்டள்ளது. சைபீரியாவுக்கு இந்தக் கெதியென்றால் சகாராவின் விதியென்னவாகும்.

- துருவங்களில் பனி வேகமாக உருகுகிறது. இன்னும் 50 வருடங்களில் மாலைதீவுகளின் கூட்டம் உலகப்படத்தில் இருப்பது கேள்விக்குறியாகி விடும். இதனை உலகுக்கு அறிவிப்பதற்காக அந்நாட்டின் அமைச்சரவைக் கூட்டத்தை ஒருமுறை கடலுக்கு அடியிலே நடத்தினார்கள். ஆனால் மனிதனின் பொருளாசைப் போட்டியில் இந்த உலகப் படத்திலிருந்து மாலைதீவு மட்டுமென்ன பசுபிக் சமுத்திரத்திலும் அட்லாந்திக் சமுத்திரத்திலும் உள்ள மேலும் பல தீவுகளும் இன்னும் ஓரிரு நூற்றாண்டுகளில் காணாமற் போகும் சாத்தியமுள்ளது.

- மியான்மாரில் (முன்னாள் பர்மா) இராணுவ பயங்கரவாத ஆட்சி ஏற்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவேறப் போகிறது. அந்நாட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயகத் தலைவி கடந்த இருபது ஆண்டுகளாக வீட்டுக காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஈராக்குக்குள் ஜனநாயகத்தை நிலைநாட்டப் போவதாக நுழைந்த பெரிய உலக நாடுகள் இங்கு மட்டும் இராணுவ பயங் கரவாத ஆட்சியாளர்களோடு கூடிக் குலாவுகிறார்கள்

- மத சட்டதிட்டங்களை கடைபிடிக்கவில்லை என்ற பெயரில் ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் பெண்களின் மூக்கையும், காதையும் அறுக்கிறார்கள்

- உலகில் நாளாந்தம் குண்டு வெடிக்கும் நாடுகளில் ஈராக், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகள் முன்னணி வகிக்கின்றன.

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 19 வது தேசிய மாநாட்டிற்கு .. 

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

**பங்களிபபினை வழங்கி வந்திருக்கிறது.**

**1940 களின் முற்பகுதிலேயே தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை கம்யூனிஸ்ட் கட்சியினால் வலியுறுத்தப்பட்டிருந்தது.**

**1950 களின் நடுப்பகுதியில் சிங்களத்துக்கு மாத்திரம் சிறப்புரிமை என்று வந்தபோது அதற்கெதிராகப் பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜ கட்சியும் வழங்கிய பங்களிப்பு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது.**

**அதிகாரத்துவ,இனவாத சக்திகளின் தொலை நோக்கற்ற அரசியலே நாட்டு நிலைமையை பாரதூரமான நிலைக்கு இட்டு வந்தது.**

**சுதந்திரம் பெற்று 62 ஆண்டுகளில் 40 ஆண்டுகள் இந்த நாடு அமைதியற்று காணப்பட்டது.**

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினதும் சக இடதுசாரி கட்சிகளினதும் தீர்க்கதரிசனமான ஆலோசனைகள் செயற்பாடுகள் கருத்திற்கு எடுக்கப்பட்டிருந்தால் இந்த அவல நிலை ஏற்பட்டிருக்காது.**

**மாறாக இடதுசாரிகளை பலவீனப் படுத்தும் செயற்பாடுகளே இலங்கையின் குறுந்தேசியவாத, பெருந்தேசியவாத வலதுசாரி அரசியல் சக்திகளால் முன்னெடுக்கப்பட்டன.**

**இன்று இடம்பெயர்ந்த மக்கள்**



**சுயமரியாதையுடனும், கௌரவத்துடனும் தமது சொந்த இடங்களில் குடியேற்றப்பட வேண்டும்.**

**இலங்கை பல்லின சமூகங்களின் நாடு என்பது நடைமுறையில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.**

**நாட்டின் அனைத்து மக்களினதும் ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.**

**அரசியல் யாப்பு மாற்கில் வை பிரதானமாக உள்ளடக் கப்பட வேண்டும்.**

**வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் திணறும் மக்களின் அன்றாட வாழ்வில் நம்பிக்கையினை ஏற்படுத்த வேண்டும்.**

**எழில் மிகுந்த சமாதானமான சமத்துவமான இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும்.**

**இதற்கான தேடல்களை இல ங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 19வது மாநாடு மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.**

**தெற்கு வடக்கு என்றில்லாமல் அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளும் நாம் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய காலம் நெருங்கிவிட்டதென்றே கருதுகிறோம்.**

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி - பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறவுகள் 20 ஆண்டுகால பாராம்பரியம் கொண்டவை**

**பல சமூக பொருளாதார விடயங்களில் நாம் ஒரே மாதிரியாக சிந்திப்பவர்கள்.**

**மக்களின் விடியலுக்கான எமது உறவுகள் நீடூழி வாழட்டும்.**

# அபிமன்யு பதில்கள்

*பொ. சண்முகானந்தசிவம், மட்டக்களப்பு*

**நெடுங்காலமாக புலிகளின் முக்கியஸ்தர்களில் ஒருவராகவும் பல கப்பல்களை நிர்வகித்து சர்வதேச கள்ளச் சந்தைகளில் ஆயுதங்ளைக் கொள்வனவு செய்து அனுப்பி வந்தவருமான கே.பி என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் இப்போது தமிழ் மக்களின் சிதைந்த வாழ்வை அரசாங்கத்துடன் சேர்ந்து பொருளாதார ரீதியில் முன்னேற்ற உழைக்கப் போவதாகக் கூறி வருவது பற்றி நீங்கள் என்ன கூறுவீர்கள்?**



கே.பி கூறுவதில் உள்ள உண்மைத்தன்மை கேள்விக்குரிய ஒன்றாகும். ஆவர் மலேசியாவில் இருந்து பிரபாகரனுக்குப் பின்னான எல்ரீரீ யின் தலைவராக நாடு கடந்த தமிழீழம் அமைக்கப் போவதாக வெளிநாடுகளில் செயற்பட்டு வந்தவர். அவர் எதிர்பாராத விதமாக கைதாகி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு இபபோது இலங்கை அரசின் விசாரணைப் பிடியில் இருக்கிறார். இலங்கை அரசினால் இவர் கைது செய்யப்படாமல் இருந்நிருந்தால் இன்று இப்படி சொல்லியிருப்பாரா என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டியிருக்கிறது.

பத்மநாதனிடம் எல்ரிரீ யின் சர்வதேச வலையமைப்பு, தொடர்புகள், மற்றும் நடவடிக்கைகள் பற்றி இலங்கை அரசு அதிகாரிகளுக்கு வேண்டிய அதி முக்கியமானதும் அவருக்கு மட்டும் அந்தரங்கமாகத் தெரிந்திருக்கக்கூடிய –தகவல்களை அவர் தமது கைவசம் கொண்டுள்ள நபராக இல்லாதிருந்தால். அவருக்கு இலங்கை அரசு இன்றைக்கு வழங்கியிருக்கும் சந்தர்ப்பங்களை வழங்கியிருக்குமா?

வெளிநாடுகளிலிந்து எல்ரீரீ யிற்குக் கிடைத்து வந்த வருடாந்த வருமானம் அமெரிக்க டொலர்களில் ஏறத்தாழ 300 மில்லியன்கள் (இலங்கையின் இன்றைய பணப்பெறுமதியில் இது 4500 கோடி ரூபாய்கள்) எனக் கணிப்பிட்டு உலக பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களைத் தரும் 'ஜேனின் பாதுகாப்பு வாரஇதழ்' (Jane's Defence Weekly) எனப்படும் பிரபல சர்வதேச பத்திரிகை சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. அத்தகைய வருமானத்தை ஈட்டுவதற்கான மூலதனங்கள் பற்றிய விபரங்களையும் அவற்றைக் கையாளுவதற்கான வழிமுறைகளையும் அனுபவங்களாகக் கொண்டவராக பத்மநாதன் இல்லாதிருந்தால் தற்போது அவர் கூறும் நிலைப்பாட்டை வெளியிடும் வாய்ப்பை அவர் பெற்றிருப்பாரா?

இவர் இன்று கூறும் தமிழ் மக்கள் சம்பந்தமான நிலைப்பாட்டை முன்னர் எடுத்திருந்த எத்தனையோ தமிழர்களை -அரசியற் தலைவர்களை, அரசாங்க அதிகாரிகளை, சமூகநலன் மற்றும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட செயற்பாட்டார்களை, உண்மைகளைத் துணிச்சலோடு வெளிப்படுத்தி வந்த அறிவார்ந்த புத்திஜீவிகளை - அநியாயமாக புலிகள் துரோகிகள் எனக் குற்றம் சுமத்தி படுகொலைகள் செய்வதற்கு கடைசிவரை துணை நின்றவர்தானே இந்த பத்மநாதன். இப்போது அந்தப் பாவங்களுக்கு பிராயச்சித்தம் செய்வதற்காகத் தான் இவர் இன்று கூறும் நிலைப்பாட்டை எடுத்திருக்கிறாரா? அல்லது அப்பாவி இளைஞர்களுக்கெல்லாம் சைனட் கொடுத்து சாகும் வழிபாட்டை வளர்த்தவர் இப்போது தன்னை மட்டும் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்த நாடகம் போடுகின்றாரா? அல்லது இப்போது புலியின் வீரப்பிரதாபம் சொல்லி வெளிநாட்டுத் தமிழர்களிடம் பணம் கறக்கும் தொழிலைச் செய்ய முடியாது என்பதால் தமிழ் மக்களின் புனர்வாழ்வு அபிவிருத்தி என்னும் போர்வையில் புதிய கடையை விரிக்கிறாரா? ஆனால் ஒன்று இவரின் கைவசம் தமிழர்களின் பல்லாயிரம் கோடி பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் உள்ளன. அந்த சொத்துக்கள் வேறெங்கும் போகாமல் அவலங்களுக்குளளால் தப்பி வந்து புதிய வாழ்வைத் தேடிக் கொண்டிருக்கும் தமிழர்களின் புனர்வாழ்வுக்கு அவை சேர்க்கப்படுமானால் அந்த முயற்சிகளை வரவேற்போம். ஏல்லாவற்றிற்கும் காலம் வரும் அப்போது எல்லாம் வெளிச்சத்துக்கு வரும்.

*க.ஜெயராசா,, கொழும்பு*

**யாழ் கொக்குவில் பகுதியில் அண்மையில் மூன்று சிங்கள வர்த்தகர்கள் இனம் காணப்படாத சில நபர்களினால் வாள்வெட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அந்தச் செயலைச் யெ்தவர்கள் யார் என்பது இன்னமும் முறையாக, சரியாக யாராலும் வெளிப்படுத்தப்படவில்லை. ஏன்ன காரணத்தின் அடிப்படையில் இப்படியொரு சம்பவம் நடைபெற்றது என்பதுவும் தெரியவில்லை. அது தனிப்பட்ட வர்த்தக விரோதம் காரணமாகவும் இருக்கலாம். ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயமாக இது பற்றிக் கூறலாம். இவ்வாறான செயல்களை இன்றைய காலகட்டத்தில் மேற்கொண்டவர்கள் - மெற்கொள்பவர்கள் யாராக இரந்தாலம் அவர்கள் தமிழர்களின் நலன்களக்கு எதிராகச் செயற்படுபவர்களே! ஏனெனில், இத்தகைய செயற்பாடுகள் ஏற்படுத்தக் கூடிய விளைவுகள் - தமிழர்களின் பிரதேசங்களில் பதட்டத்தையும் இனங்களுக்கிடையே குரோதத்தையும் வளர்ப்பவையாகவே அமையும். அரச படைகள் போக்குவரத்துத் தடைகளை, தேடுதல் வேட்டைகளை மற்றும் வீதிப் பரிசோதனைகளை மீண்டும் அதிகரிப்பதற்கே வழி வகுக்கும். மீண்டு வரும் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிப்தாகவே அமையும். அரசின் இராணுவ விரிவாக்கத்துக்கு நியாயங்கள் தேடித்தரும். தென்பகுதிகளில் சிங்கள மக்களின் மத்தியில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்மக்களை அச்சத்தின் மத்தியில் வாழும் நிலைக்கு உள்ளாக்கும். ஆக மொத்தத்தில் தமிழர் பிரதேசங்களில் ஜனநாயகம் மீள நிலை பெறுவதையும் சமாதானமான சூழ்நிலைமைகளையும் ஏற்பட்டு வரும் அரசியல் பொருளாதார முன்னேற்றங்களையும் சீரழிக்கும் நோக்கம் கொண்டவையாகவே இவ்வாறான வன்முறைகள் காணப்படகின்றன.

இவ்வாறான நெறிகெட்ட வன்முறைகள் மக்கள் விரோதனமானவை, சமூக விரொதமானவை. இவற்றை தமிழ்ப பொதுமக்களும் தமிழ் அரசியல் சமூகத் தலைவாகளும் வெளிப்படையாகவே கண்டிக்க வேண்டும். நாட்டினதும் அனைத்து மக்களினதும் நலன் கருதி இலங்கை அரசாங்கம் இச்செயலைப் புரிந்தவர்களையும் அதன் பின்னணியில் இருந்து இயங்கியிருக்கக் கூடிய சூத்திரதாரிகளையும், அவர்கள் யாராயிருப்பினும் எந்த இனத்தவராயிருப்பினும் பாரபட்சமின்றி கண்டுபிடித்து சட்டத்தின் முன்னால் நிறுத்துதல் வேண்டும்.

*அ.வசந்தகுமார் , அச்சுவேலி*

**நார்வேயில் சிவசுப்பிரமணிய ஆலயத்தின் தேர்த் திருவிழா உற்சவத்தின் போது நடைபெற்ற வன்முறைகள் பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?**

இலங்கையில் தமிழர்களின் சமூக வாழ்வையும் பண்பான சமூகக் கட்டமைப்பையும் வேரறுத்த, நாசம் பண்ணிய வன்முறைக் கலாச்சாரத்தின் தொடர்ச்சிதான் இது.

மேற்கத்தைய நாடுகளை நோக்கி புலம் பெயர்ந்த தமிழர்கள் தாம் புகுந்துள்ள நாடுகளில் பல இந்துத் தெய்வங்களின் பெயர்களில் பல கோயில்களை நிறுவியுள்ளார்கள். ஆவற்றில் விரல் விட்டு எண்ணக் கூடிய சில கோவில்களைத் தவிர ஏனைய பெரும்பான்மையானவை பண வருமானத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள வியாபார நிறவனங்களாகவே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. பலரால் இவை சமூக அந்தஸ்த்ததைப் பெறுவதற்கும் உயர்த்திக் கொள்வதற்குமான சாதனங்களாக பிரயோகப் படுத்தப்பட்டு வருகின்றன. இந்த உண்மை வெளிநாடுகளில் உள்ள தமிழர்களினால் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒன்றே.

இதயத்திலிருந்து நான் என்னும் அகங்காரத்தையும் ஆணவத்தையும் விலக்கி அன்பைப் பொழிவதே இறை வழிபாட்டின் அடிப்படை என அனைத்து மறை நூலகளும் மொழிகின்றன. ஆனால் இங்கோ நிலவுகின்ற வன்முறை மனோநிலைகளின் அகோரங்கள் ஆலய வளாகங்களிலும், ஆலயம் சம்பந்தப்பட்ட விடயங்களிலும் தலைவிரித்தாடுவது மிகவும் கேவலமானதாகும் - அருவருக்கத் தக்கதாகும்.

கோயில்களின் கஜானாக்களை கண்ணை மூடிக்கொண்டு நிரப்பும் புலம் பெயர்ந்த சைவர்கள் இதனை உணர்வதாகவோ கண்டிக்க முயல்வதாகவோ தெரியவில்லை. துமிழர்கள் ஒன்றில் பக்தி வைத்துவிட்டால் கண்மூடித்தனமாக நடந்து கொள்வார்கள் என்பதை இந்தக் கோவில் வியாபாரிகள் புரிந்து வைத்திருக்கிறார்கள். இதனாலேயே கோயில்களைபக் கட்டி கடவுளை வியாபாரம் செய்து பணத்தையும் பந்தாவையும் பெருக்கிக் கொள்ளும் கோயிற் கர்த்தாக்கள் தமக்கிடையேயுள்ள போட்டிகளில் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு வன்முறைகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். முன்னர் புலிகளின் வன்முறைப் பலங்களைக் காட்டி பணம் கறந்தவர்களுக்கு இப்போது அது இல்லாததால் தாமே வன்முறைகளைப் பாவிப்பவர்களாக ஆகியுள்ளனர். மேலும் முன்னர் இவர்கள் புலிகளின் தலைமையால் ஓர் மிரட்டல் ஒழுங்குக்குள் வைக்கப்பட்டிருந்தார்கள். இப்போது அது இல்லாததால் தாமே தமக்குள் அடிதடியில் இறங்கியிருக்கிறார்கள்.

# தமிழ் பேசும் மக்களின் இன்றைய தேவை

கடந்து வந்த 30 வருடங்களாக துப்பாக்கிகள் குண்டுகள் மரணங்கள் சொத்தழிவுகள், கால் போதல் அல்லது கை போதல் அகதி வாழ்வு, அநாதைகளாதல், இடம்பெயர்வு புலம்பெயர்வு, என சொல்லொணா அவலங்களையும் துயரங்களையும் இழப்புக்களையும் அனுபவித்து செத்துப் பிழைத்து நிற்கும் தமிழ் மக்களுக்கு இப்போது ஓரளவு சமாதான, சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்கு சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது என்பது உண்மையே ஆயினும் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டியிருக்கிறது.

உயிரிழப்புக்கள், மனநிலை பாதிப்புக்கள், அங்கவீனங்கள் இவற்றைவிட வாழ்விடங்கள் எல்லாம் அழிந்து போனமை, பொருளாதார மூலங்கள் எல்லாம் அடையாளம் தெரியாமல் போயுள்ளமை என்பன மிகவும் பாரியனவாகும். மீண்டும் பூச்சியத்திலிருந்தல்ல அழிவுகளின் அதல பாதாளங்களிலிருந்து வாழ்க்கையைத் தொடங்க வேண்டியிருக்கிறது. சிதைவுகள் இடிபாடுகளிலிருந்து புதிதாக எல்லாமே கட்டப்பட வேண்டியனவாக உள்ளன.

ஆனால், பழைய நிலையை அடையவும் புதிய காலத்தின் தரத்துக்கு உயரவும் வகையாக வாழ்வு தங்குதடையற்று கட்டியெழுப்பட வேண்டுமானால் இங்கு பணங்களும், இயந்திரங்களும் கல்லும் மண்ணும் போதாது. எல்லாவற்றிற்கும் மேலாக மனித மனங்களில் மாற்றம் வேண்டும். இந்த மனமாற்றம் அரசாங்க அதிகாரத்தில் உள்ளவர்களிடமும் வேண்டும், அரசியல் சமூகத் தலைவர்களிடம் நிலவ வேணடும், புத்திஜீவிகளிடம் சமூகப் பொறுப்புணர்வு கலந்த மனமாற்றம் வேண்டும். மக்களின் மனங்களிலும் உயர்ந்த கலாச்சாரங்கள் கொண்ட நவீன வாழ்வுக்கான மனமாற்றம் ஏற்பட வேண்டும்

வடக்கு கிழக்கில் முற்றுமுழுதாக யுத்தம் முடிந்து ஓராண்டுக்கு மேலாயினும் இப்போதும எங்கும் இராணுவம் எதிலும் இராணுவம் என்றிருக்கும் இராணுவமான சூழ்நிலை படிப்படியாக வேனும் முற்றுமுழுதாக விரைவாக அகற்றப்பட வேண்டும். சாதாரண இயல்பு வாழ்க்கையை மக்கள் கொள்வதற்கான குடியாட்சி அமைப்புக்கள்




ஆற்றலுடன் செயற்படும் வகையாக் அரச நிறுவனங்கள் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

ஆயதங்தாங்கிய படையினர் மத்தியில்தான் தமது வாழ்வு நிரந்தரமாகி விடுமோ என்ற ஏக்கம் விரக்தியையும், அவநம்பிக்கைகளையுமே வளர்க்கும். எனவே அவ் ஏக்கம் நீக்கப்பட வேண்டும்.

உலகில் எந்த ஜனநாயக நாடுகளிலும் சாதாரண மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான செயற்பாடுகளின் மத்தியில் இராணுவமயப்பட்ட சூழ்நிலைகள் மிகக் கவனமாக தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

வடக்கிலும் கிழக்கிலும் தமது நிலங்கள் அபகரிக்கப்பட்டுவிடுமோ? நாம் பாரம்பரியமாக பெரும்பான்மையாக வாழ்ந்த மாவட்டங்களிலேயே நாம் சிறுபான்மையினராக்கப்பட்டு விடுவோமோ என்ற பீதி, அச்சம் உருவாவதற்குக் காரணமான அம்சங்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

பாரிய வன்முறை உட்பட நாம் மீண்டும் எப்போதும் வன்முறைக்கு ஆட்படலாம் என்ற பயத்தை நீக்கும் வகையான சமூக பாதுகாப்பு நிலைமைகள் உறுதியாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

சுதந்திரமாகத் தொழில் செய்வதற்கும் அதில் அநாவசியமான அதிகாரத் தலையீடுகள் துஷ்பிரயோகங்கள் தவிர்க்கப்படுவதற்குமான நிலைமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

போக்குவரத்து மற்றும் நடமாடும் சுதந்திரம் போன்ற விடயங்களில் நாம் இரண்டாந்தர பிரஜைகளாக நடத்தப்படுகிறோம் என்ற உணர்வு தமிழ் மக்களுக்கு ஏற்படாதவாறு நிலைமைகள் மாற்றமடைய வேண்டும்.

தமது பாராம்பரிய அடையாளங்களுடனும் தனித்துவத்துடனும் சக சமூகங்களுடன் சமாதானமாகவும் சகோதரத்துவ உணர்வுடனும் சேர்ந்து வாழ்வதற்கான நிலைமைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

பலாத்காரமான முறைமைகள் அதிருப்தியையும், விரக்தியையுமே எஞ்ச வைத்து வளர்க்கும். உயர் பண்பான ஒழுக்கங்கள் கொண்ட ஜனநாயக வாழ்க்கை முறையொன்றின் ஒளிக்கீற்றுக்கள் வாழ்வின் எல்லா திசைகளிலும் பாய்ச்சப்பட வேண்டும்.

இலங்கையில் எண்ணிக்கையில் சிறுபான்மையான் தமிழ், முஸ்லீம், மலையக சமூகங்களின் சமத்துவத்திற்கான கோரிக்கைகள் யதார்த்தமான முறையில் அணுகப்பட வேண்டும், அங்கீகரிக்கபபட வேண்டும். பெரும்பான்மையினர் தருவதையே சிறுபான்மையினர் ஏற்றாக வேண்டும் என்ற மேலாதிக்க எண்ணம் இந்த நாட்டை மேலும் குடடிச் சுவராக்கும்.

அரசியலமைப்பில் கொண்டுவரப்படும் மாற்றங்கள் தொடர்பில் இன சமூகங்களின் தலைமைத்துவங்களுடன் அரசு இணக்கமான பேச்சுவார்த்தைகளை நடாத்தி சுமூகமான நிலையொன்றினூடாக அரசியல் முன்னேற்றத்திற்கான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் அரசும், தமிழ்ர் தரப்பு பிரதிநிதிகளும் அனைத்து சிறுபான்மை சமூகங்களின் தலைவர்களுடனும் விரிவான ஆனால் விரைவான பேச்சுவார்த்தைகளை நடாத்தி நிரந்தர சகமாதானம் ஏற்படக் கூடிய அரசியற் தீர்விற்கு வழி தேட வேண்டும்.

மேலும் இழுபறிப்பட்டுச் செல்வதற்கான நிலைமைகள் நாட்டிலுள்ள சமூகங்களின் நல்லுறவுகளுக்கோ நாட்டின் அபிவிருத்திக்கோ உதவப் போவதில்லை.

சுமூகங்களின் நல்லுறவிற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் தடையாக இருக்கும் காலாவதியான மரவுரிகளை களைந்தெறிவோம்.

உறுதியான அதிகாரப்பகிர்வு கொண்ட அரசியற் கட்டமைப்பு ஒன்றைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையின் அரச முறைமையில் தாமும் பங்காளர்களாக இருக்கிறோம் என்று உணர்வுபூர்வமாக தமிழ் பேசும் மக்கள் உணரக்கூடியதான நிலை இங்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதாவது தமது பாரம்பரிய வாழிடங்களில் தமது கருமங்களை தாமே மேற்கொள்வதற்கான கட்டமைப்புக்கள் உருவாக்கப்படுகையிலேயே இனங்களுக்கிடையேயான சமத்துவத்திற்கும் சமூகங்களிடையே நல்லுறவிற்குமான கதவுகள் திறக்கப்படுகின்றன.

இதுவரை காலமும் இந்த நாடு அனுபவித்த துன்பங்களுக்கும் அவலங்களுக்கும் அதுவே நீதியானதொரு தீர்வாகவும் அமையும்.

# நேர்மையான ஐக்கியம் மக்களின் நலனிலிருந்தே கட்டியெழுப்பப்பட வேண்டும்

## மலையக அரசியல் தலைமைகளிடம் அரசியல் விழிப்புணர்வு கொண்ட மலையக மக்களின் விண்ணப்பம்

அரசியல் யாப்பில் சீர்திருததங்களைக் கொணர்தல், தேர்தல் முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வருதல், தற்போதுள்ள ஜனாதிபதிக்கான அதிகாரங்களை குறைத்து பிரதமருக்கான அதிகாரங்களை எவ்வாறு அதிகரிப்பது

பாராளுமன்றத்துக்கான பிரதிநிதிகள் தெரிவு தொகுதிவாரியாகவும், விகிதாசார முறையிலும் தெரிவு செய்யப்படுவதற்கான முறைகள், உள்ளூராட்சி தேர்தல் முறைகளிலும் அமைப்பிலும் மாற்றங்களை எவ்வாறு ஏற்படுத்துவது என இன்னோரன்ன பிரச்சினைகள் பற்றி பேசப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வருகின்ற இவ் வேளையில் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுபான்மையின கட்சிகள், தொழிற் சங்க அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், கல்விமான்கள் புத்திஜீவிகள் ஆகியோர் தரப்பில் பொது நிர்வாக அமைச்சுக்கு ஆலோசனைகள் கொண்ட அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட முன்னரான ஒரு கலந்துரையாடலில் பல்வேறுவிதமான மாறுபட்ட கருத்துக்கள் நிலவிய போதிலும் இறுதியாக பி.பி. தேவராஜ் அவர்களின் தலைமையிலான குழுவினர் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். இந்த அறிக்கையில் குறிப்பிட்டபடி இந்திய வம்சாவளி மக்கள் செறிந்து வாழும் பகுதிகளான நுவரெலியாவில் 94, பதுளை 34, கண்டி 11, மாத்தளை 15, கேகாலை 15, இரத்தினபுரி 18, களுத்துறை 9 என மொத்தமாக 195 புதிய கிராமசேவகர் பிரிவுகள் அமைக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நிர்வாக முறைகளில் பெருந்தோட்ட மாவட்டங்கள் பொதுநிர்வாக அமைப்புக்களுடன் இணைக்கப்படவில்லை. அதேபோல இன்றும் தோட்டங்கள் மாகாணசபை நிர்வாகத்தின் கீழோ, அல்லது உள்ளூராட்சி நிர்வாகத்தின் கீழோ வருவதில்லை. இவைகள் இன்னும தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் இயங்குகின்றன. இவற்றில் கட்டாயமான மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களில் ஒரு மாவட்டததிலாவது குறைந்தபட்சம் மலையக தமிழர் மிகவும் செறிந்து வாழும் பகுதியான நுவரெலியா மாவட்டத்திலாவது மலையகத்தவர் ஒருவர் மாவட்ட செயலாளராக உருவாக்கப்பட வேண்டும் எனவும் அதேபோல 335 பிரதேச செயலகங்களில் ஒரு சில பிரதேச செயலகங்களிலாவது மலையக தமிழர் பிரதேச செயலாளர்கள் கடமைபுரிய வேண்டும் எனவும் மலையக மக்கள் முன்னணியின் உப தலைவர் அ. லோறன்ஸ் தெரிவித்துள்ளார். அதாவது இன விகிதாசாரத்திற்கேற்ப 800 கிராம உதத்தியோகத்தர்களாவது நியமிக்கப்பட வேண்டும். ஆனால் முழு இலங்கையிலும் 200 பேருக்கு குறைந்தவர்களே கிராம அலுவலர்களாக நியமனம் பெற்றுள்ளனர் என்பதை குறிப்பிடத் தயங்கவில்லை. இன விகிதாசாரத்திற்கேற்ப சனத்தொகை கணிப்பீட்டிற்கு ஏற்ப தெரிவுகள் இடம் பெற வேண்டுமென்பது நியாயமான கோரிக்கையாக இருந்த போதிலும் இந்த விடயத்திற்கான தீர்வை காண்பதில் உரியவர்கள் நேர்மையாக நடந்து கொள்வார்களா என்பது கேள்விக்குறியே. பி.பி. தேவராஜ் கூறுவது போல நாங்கள் எங்களுக்கு விருப்பமான கோரிக்கைகளை எமக்கு விருப்பமான வகையில் முன்வைக்கலாம் அது நியாயமானதே ஆனால், அந்தக் கோரிக்கைகளில் எமக்குக் கிடைக்கக்கூடியவற்றை எவ்



பி.பி.தேவராஜ்

வாறு எமது மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும். அரசுகள் எமது நியாயமான கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றும் என்பதில் உறுதிகொள்ள முடியாது.கடந்த கால வரலாற்றைத் திரும்பிப் பார்ப்போமேயானால் 1936ம் ஆண்டு வி.சோமசுந்தரம்- பதுளை, கோ நடேச ஐயர்- ஹட்டன், இராஜரட்ணம்- ஹட்டன், ஜே.டி. ரட்ணம் - நுவரெலியா, எஸ்.பி. வைத்திலிங்கம் -தலவாக்கலை ஆகிய இந்திய வம்சாவளித் தமிழர்கள் நால்வர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆதாரம் மலையக தமிழர் வரலாறு) 1947ம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு 07 பேர் தெரிவு செய்யப்பட்டனர். 1948 இற்குப் பிறகு நடந்தது என்னவென்பதை எல்லோரும் நன்கறிவர். அன்று மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டாலும் நடைமுறையில் இம் மக்களுக்கு எதுவித நன்மையும் கிடைத்தாகத் தெரியவில்லை

மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு அது மீண்டும் வழங்கப்பட்டுள்ளதெனக் கூறப்படும் விடயத்தை எடுத்துக்கொண்டால் மலையக மக்களின் வாக்குகளை தந்திரமாக பறித்தெடுக்கும் நோக்கத்துடனேயே ஐ.தே.க ஆட்சியாளர்களால் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. இம் மக்கள் வாக்களிக்கும் இயந்திரமாகவே பார்க்கப்படுகின்றார்கள்.பிரஜாவுரிமையை பெற்றுக்கொண்ட இம் மக்கள் அதன் அனுகூலங்களை இதுவரை பெறவில்லை.குறைந்த பட்சம் பிறப்புப்பதிவு செய்வதற்குக்கூட பல மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படி சென்றாலும் அங்கு கடமைபுரியும் உதத்தியோகத்தார்களுக்கோ. இவர்களுக்கோ உரையாடுவதற்கு மொழி தெரிவதில்லை. எனவே இம் மக்கள் தங்கள் குறைகளை எடுத்துச்சொல்ல ஒரு இடம் வேண்டும். அபிவிருத்திக்கான நிதியில் பங்குதாரர்களாக வேண்டும். இதனை சரியாக செய்வதற்கு மக்கள் பிரதிநிதிகள் என்போர் மக்கள் நலனிலாவது ஐக்கியமாக ஒருமித்த கருத்துடன் செயற்பட முன்வர வேண்டும். எனவே மக்கள் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதைவிட இம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் எனப்படுவோர் ஒருமித்த கருத்து உடன்பாட்டுக்கு வர வேண்டியது காலத்தின் கட்டாயமும் அவசியமும் ஆகும். தங்கள் சுயநலன்களுக்காக மாறுபட்ட கருத்துக்களுடன் ஒற்றுமையுடன் செயலாற்றுவதன் மூலமே மக்களுக்கான நன்மைகளை ஓரளவாவது பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். வெறுமனே ஒற்றுமை, கலந்துரையாடல் எனக்கூறி தங்கள் நலனில் அக்கறை கொள்வதை தவிர்த்துக் கொள்வது எதிர்கால சந்ததியினருக்கும் நன்மை பயக்கும்.

உதாரணமாக வடக்கு கிழக்கில் ஏற்பட்ட ஐக்கியமின்மை, ஏகபிரதிநிதித்துவம், மக்களின் மனங்களில் நஞ்சை வார்ப்பது, குரோத மனவுணர்வை ஏற்படுத்தல் போன்றவைகளால் இன்று தமிழர் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நாம் பாடமாகக் கொள்வோம். மக்கள் தெளிவும் நம்பிக்கையும் பெற வேண்டுமானால் ஐக்கியமாக மக்களை தெளிவுபடுத்த வேண்டும். நாம் பேரம் பேசும் சக்தியாக உருவாக்கம் பெற வேண்டும்.

**பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நிர்வாக முறைகளில் பெருந்தோட்ட மாவட்டங்கள் பொதுநிர்வாக அமைப்புக்களுடன் இணைக்கப்படவில்லை. அதேபோல இன்றும் தோட்டங்கள் மாகாணசபை நிர்வாகத்தின் கீழோ, அல்லது உள்ளூராட்சி நிர்வாகத்தின் கீழோ வருவதில்லை. இவைகள் இன்னும தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் இயங்குகின்றன. இவற்றில் கட்டாயமான மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும்**

குமாரன்

# கேபியா! வைகோவா! யார் சொல்வது உண்மை?

## பிரபாகரன் இருந்தவரை புலிகள் மட்டுமே தியாகிகள் மற்றவர்கள் எல்லாம் துரோகிகள். இப்போது புலிகளுக்கு உள்ளேதான் யார் துரோகி யார் தியாகி என்ற போட்டி காரசாரமாக நடைபெறுகிறது.

**அண்மையில் ஊடகங்களில் வெளிவரும் கேபியின் பேட்டிகள் பல சர்ச்சைகளையும் சந்தேகங்களையும் கிளப்பியுள்ளன. இலங்கை அரசின் புலிகளுக்கெதிரான இறுதி யுத்தத்தின் போது யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்காக இந்திய அரசாங்கம் முயற்சித்தது என்றும் அதைக் குழப்பியவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக பிரமுகர் மகேந்திரனும் பிரபாகரனின் அதிதீவிர ஆதரவாளரான மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோபாலசாமியும் என புலிகளின் சர்வதேசத் தலைவர் குமரன் பத்மநாதன் கூறுகிறார்.**

திமுக பிரமுகர் கனிமொழி புலிகளின் மற்றொரு தீவிர ஆதரவாளரான புனித தந்தை போல் கஸ்பர்ஸ் ஆகியோரின் முயற்சியை அடுத்து இந்திய மத்திய அமைச்சர். ப.சிதம்பரம் அவர்கள் புலிகள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் பேச்சுவார்த்தை மூலம் அரசியற் தீர்வு காணவும் உடனடியாக ஆயதங்களைக் கீழே போடவும் தயாரென அறிவித்தால் இந்தியா யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வர முயற்சிக்கும் எனக் கூறியதோடு அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டதாக புலிகளின் தலைவர் பத்மநாதன் கூறுகிறார். ஆனால் அந்த விடயங்களை பாலசிங்கத்தக்குப் பின்னர் புலிகளின் சர்வதேசப் பேச்சாளராகச் செயற்பட்ட நடேசன் தோழர் மகேந்திரனுக்குக் கூறியதாகவும் மகேந்திரன் வைகோவுக்குக் கூறியதால் அந்த முயற்சிகள் முடியாமற் போனதாகவும் கூறுகிறார். அந்த நேரத்தில் நடந்து கொண்டிருந்த இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் தாங்கள் வெல்லுவதற்காகாவே அவ்வாறு வைகோ குழுவினர் செயற்பட்டதாக கேபி காரணமும் கூறுகிறார்.


இது பற்றித் தெரிவிக்கும் தோழர் மகேந்திரனோ தாங்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஓர் அரசியற் தீர்வையே எப்போதும் விரும்புவதாகவும் யுத்தம் நடந்த காலத்தில் தாங்கள் யுத்தநிறுத்தம் மற்றும் பேச்சுவார்த்தை மூலமான தீர்வையே வலியுறுத்தியதாகவும். கூறுகிறார். ஆனாலும் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது தனக்கும் புலிகளின் சர்வதேசப் பேச்சாளராக செயற்பட்ட நடேசனுக்கும் இடையில் யுத்தநிறுத்தம் தொடர்பாக எதுவித சம்பாஷணையும் நடைபெறவில்லை என்றும் கூறுகிறார்.

வைகோவோ தாங்கள் யுத்த நிறுத்தத்தை விரும்பியதாகவும் பிரபாகரனே தமிழீழத்தை கைவிடவும் ஆயுதங்களைக் கீழே போடவும் தயாராக இருக்காத தலைவர் எனவும். கே.பி இப்போது கோத்தபாயாவின் கையாளாகச் செயற்படுவதாகவும் குற்றம் சாட்டுகிறார்.

கேபி ஒரு தடவை தன்னை, பிரபாகரன் பொறுப்புகளிலிருந்து விலக்கி விட்டதாகக் கூறுகிறார். பின்னர் தானேதான் புலிகளின் சகல சர்வதேச விடயங்களுக்கும் பொறுப்பாக இருந்ததாகக் கூறுகிறார். ஒரு தடவை தன்மீது பிரபாகரன் சந்தேகப்பட்டதாகக் கூறுகிறார் பிறகு பிரபாகரனின் மகன், தன்னிடமே பிரபாகரனையும் பொஞ்சாதி, பிள்ளை குட்டிகளையும் காப்பாற்றும்படி கெஞ்சியதாகவும் கூறுகிறார். கடைசி நேரத்தில் புலிகளின் சர்வதேசத் தொடர்பாளராக இவர்தான் செயற்பட்டார். இவரே நாடு கடந்த தமிழீழம் அமைப்பதற்கான எல்லா வேலைகளையும் தொடங்கினார். இப்போது அவை எதற்கும் தனக்கும் தொடர்பு இல்லாதவர் போலவும் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக புலிகளின் தவறுகளை உணர்ந்து இலங்கை அரசாங்கத்தோடு சேர்ந்து தமிழ் மக்களின் மீட்சிக்காக உழைத்தவர் போலவும் அவரது பேட்டிகள் அமைந்துள்ளன.



இவர்களைத் தான் வைகோவும் நெடுமாறனும் “அஞ்சாத புலிகள்”, ”தியாகத் திருவுருவங்கள்”, “உயிரே போனாலும் கொள்கையை விட்டுக் கொடுக்காத மாவீரர்கள்” என்று தமிழர்களுக்கு, உலகமெல்லாம் தம்பட்டம் அடித்தார்கள். புலிகள் தமிழர்கள் மத்தியில் நடத்திய படுகொலைகளையெல்லாம் மாவீரத்தனம் என இவர்கள் தான் வியாக்கியானம் அளித்தார்கள். புலிகள் நடத்திய கண்மூடித்தனமான பயங்கரவாதங்களையெல்லாம் விடுதலைப் போராட்டம் என உலகத் தமிழர்களுக்கு விளக்கினார்கள். இபபோது அவர்களையே “துரோகிகள்”,



“பொய்யர்கள்” என்கிறார்கள்

இதற்கிடையில், புலிகளின் சில இணையத் தளங்கள் இது இந்தியாவின் சதி எனவும் கேபி இப்பொழுது இந்திய உளவுப் படையான றோவின் கையாளாக ஆகிவிட்டார் எனவும் கூறுகின்றன. அவை மேலும் கேபியின் பேட்டி தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மற்றும் இந்திய காங்கிரஸ் ஆகியவற்றின் இலங்கைத் தமிழருக்கு எதிரான சதித் திட்டத்தின் ஒரு பகுதியே எனவும் அரசியல் விளக்கம் அளிக்கின்றன.

இதில் யார் உண்மை பேசுகிறார்கள் என்பது இன்னமும் சரியாக வெளிப்படாத மர்மமாக இருக்கின்றது. வாழும் வரை மர்மமாகவே இருந்த பிரபாகரனின் முடிவும் அவரால் விசுவாசிக்கப்பட்டவர்களாலேயே மர்மமாக்கப்பட்டிருப்பது பரிதாபத்துக்குரியதாகும். பல்லாயிரக் கணக்கான பச்சிளம் பாலகர்களுக்கு கட்டாயமாக சயனைட்டைக் கழுத்திலே கட்டி கொலைகளங்களுக்கு அனுப்பிய பிரபாகரன் தனது கடைசிக் கட்டத்தில் என்ன செய்தார் எப்படி நடந்து கொண்டார் என்கின்ற உண்மை ஒரு நாள் இவர்கள் வாயாலேயே வெளிவரும்.

பிரபாகரன் இருந்தவரை புலிகள் மட்டுமே தியாகிகள் மற்றவர்கள் எல்லாம் துரோகிகள். இப்போது புலிகளுக்கு உள்ளேதான் யார் துரோகி யார் தியாகி என்ற போட்டி காரசாரமாக நடைபெறுகிறது. இந்தப் போட்டி தமிழர்கள் பரந்து வாழும் மேலைத் தேச நாடுகளில் வீதிச் சண்டைகளாகவும் மாறியுள்ள பெருமையைப் பெற்றிருக்கின்றன.

## தமிழ் அரசியல் கைதிகள் கடிதம் ...

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

கொண்டு எங்களின் விடுதலை ஏக்கத்துடன் எவ்வளவோ சமூக பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து மரண வேதனையில் இருக்கின்றனர். அந்த வகையில் குடும்பத் தலை வர்களை பிரிந்த எதத்னையோ பெண்கள் உழைக்கும் கரங்களை இழந்த எத்தனையோ குடும்பங்கள் பொருளாதார பின்னடைவு, குடும்ப பாதுகாப்பின்மை ஏனைய சமூக கலாச்சார பிரச்ச்னை களுக்கும் முகம் கொடுத்தும் வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்ட நாங்கள் பல தடவைகள் எங்கள் நிலைமைகளை சுட்டிக்காட்டி கோரிக்கைகளை முன்வைத்து துறைசார் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி இருந்தோம். இதன் போது பல உறுதி மொழிகள் எமக்கு வழங்கப்பட்டது. இருந்தும் எங்கள் விடுதலை எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது.

சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் எங்களுக்கு குறைந்தது. நிபந்தனை அடிப்படையிலாவது வழக்கும் நடைபெறும் அந்தந்த நீதிமன்றங்களில் குடும்ப உறவுகளுடன் எங்களை இணைத்து இந்த நாட்டின் வளர்ச்சியில் எங்களையும் கௌரவமான பிரஜைகளாக இணைப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

இன்று மீள்குடியேற்றம், புனர்வாழ்வு. அபிவிருத்தி போன்ற எத்தனையோ வேலைத்திட்டங்கள் நாட்டில் மேற்கொள்ளப்படுகிறது. இருந்தும் எங்கள் உறவுகளின் மனங்களில் இறுக்கம், பயம், சோகம், துயரம் அத்துடன் சமூக, பொருளதார பிரச்சினைகள் படர்ந்து விரிந்துள்ளது. காரணம் நாங்கள் அவர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பதுதான். எனவே கடந்த காலங்களில் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கியதை கருத்திற்கொண்டு எங்களை குறைந்தது நிபந்தனையுடனான பிணையிலாவது விடுதலை செய்து எங்கள் உறவுகளின் கண்ணீரை துடைப்பதோடு எமது சுபிட்சமான எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும்படி மிகுந்த பணிவுடனும், மன்றாட்டத்துடனும் வேண்டி நிற்கின்றோம்.

**நன்றி**

இப்படிக்கு

**தமிழ் அரசியல் கைதிகள்**

**குறிப்பு:-** **தமிழ் கைதிகள் தங்கள் விடுதலை தொடர்பாக பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாருக்கு அனுப்பி வைத்த கடிதம்.**

## தமிழகத்தில் உள்ள இலங்கை அகதி ...

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

- கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு கல்லூரிக்குச் சென்று வர அரசு பேருந்துகளில் 50 ரூபாய் பேருந்து பயணச் சலுகை வழங்கப்படுகிறது.
- தமிழ் நாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் பொருட்டு வெளியூர்களில் தங்கியுள்ள மாணவ, மாணவியர்களுக்கு முகாம் பதிவு நீக்கம் செய்யப்படாமல் தொடர்ந்து பணக்கொடை, நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன.
- கருவுற்ற இலங்கை தமிழ் தாய்மார்களுக்கு தமிழ்நாடு அரசின் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் மூலம் கருவுற்ற 6வது மாதத்திலிருந்து மாதம் ரூபா 1000 வீதம் 6 மாதங்களுக்கு 6000 ரூபா நிதியுதவி வழங்கப்படுகின்றது.
- ஈமக்கிரியை செலவுகள் மேற்கொள்ளும் பொருட்டு இறந்தவர் குடும்பங்களுக்கு ரூபா 2500 வழங்கப்படுகின்றது.
- உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் மூலம் உயர் சிகிச்சை வழங்கப்படுகின்றன.
- முகாம் வாழ் குடும்பங்கள் அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.
- விளையாட்டு திறனை ஊக்குவிக்கும் பொருட்டு விளையாட்டு உபகரணங்கள் ஒவ்வொரு முகாமிற்கும் வழங்கப்படுகிறது.
- திறணாளிகளுக்கு உரிய உபகரணங்கள் வழங்கப்படுகிறது.
- ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரச மருத்துவ மனைகள் மூலம் இலவச சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

### தொழிலுக்கான சலுகைகள்

- சட்ட திட்டத்திற்கு அமைய (காலை 6மணி முதல் மாலை 6மணி வரை) முகாமிற்கு வெளியில் சென்று தொழில் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.
- தொழில் நிறுவனத்தின் உறுதி மொழிக்கிணங்க வெளியிடத்தில் தங்கி தொடர்ந்து பணிபுரியவும், முக்கிய நிகழ்வுகளுக்காக வெளியூர்களில் தங்குவதற்குரிய அனுமதிகளை முகாம் பொறுப்பு அதிகாரிகளிடம் பெற்று மாதாந்திர பணக்கொடை வழங்கும் நாளில் நேரில் ஆஜராகி பணக்கொடையினை பெற சிறப்பு அனுமதி வழங்க்கப்படுகிறது.

### முகாம் மாற்றம

- வெவ்வேறு முகாம்களில் உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளும் பட்சத்தில் விரும்பும் முகாமிற்கு சென்று வசிப்பதற்கு அனுமதி வழங்கக்ப்படுகிறது

### சான்றுகளும் உரிமங்களும்

- பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகள் அகதிச்சான்று, திருமணச் சான்று, வருமானச்சான்று, இருப்பிடச்சான்று, மற்றும் ஓட்டுனர் உரிமம் பெறத் தேவையான சான்றுகள் வழங்கப்படுகின்றன

### கடைப்பிடிக்க வேண்டிய அறிவுரைகள்

- முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் முகாமிற்கு அருகில் வசிக்கும் மக்களுக்கு தொல்லை மற்றும் சண்டை சச்சரவு செய்யாமல் இருக்க வேண்டும்
- முகாம் பொறுப்பு அலுவலரின் முன்னனுமதி பெறாமல் முகாமை விட்டு வெளியே செல்லக் கூடாது.
- தொழில் செய்ய முகாமிற்கு வெளியே செல்லும் போது நடமாட்டப் பதிவேட்டில் கையொப்பமிட்டுச் செல்ல வேண்டும்.(காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை)
- அனுமதி பெற்றுச் சென்ற நபர்களைத் தவிர மற்ற நபர்கள், ஞாயிற்றுக் கிழமைகளில் தணிக்கைக்கு தவறாமல் வருகையில் இருக்க வேண்டும்.
- மின்சாரத்தை சிக்கனமாக செலவிட வேண்டும்.
- முகாம் பதிவில் இல்லாதவர்களை எக்காரணம் கொண்டும் முகாமில் தங்கவைக்கக் கூடாது.
- முகாம் மாற்றம், தனிப்பதிவு, தனிவீடு, மற்றும் இதர தேவைகளுக்கு, வட்டாட்சியரிடம் மனுச் செய்து கொள்ள வேண்டும்.
- முகாமில் பதிவு இல்லாதவர்கள் யாரும் இருக்கக்கூடாது, பதிவில்லாதவர்கள் முகாம் பொறுப்பு அலுவலரிடம் மனுச் செய்து கொள்ள வேண்டும்.
- பிறப்பு மற்றும் இறப்பு திருமண பதிவுகளுக்கு உரிய ஆவணங்களைக்காட்டி உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலரிடம் சமர்பித்து பதிவுச் சான்றுகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- சொந்த விருப்பத்தில் இலங்கைக்கு திரும்பிச் செல்ல விரும்புபவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் வெளிச் செல்லும் அனுமதி பெற உரிய ஆவணங்களுடன் மனுச் செய்ய வேண்டும்.
- வெளிச் செல்லும் அனுமதி பெற்றவர்கள் மற்றும் ஒரு முகாமில் இருந்து ஒரு முகாமிற்கு மாறிச் செல்பவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளை முகாம் பொறுப்பு அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.
- முகாமில் நிர்வாக காரணங்களுக்காக முகாம் மாற்றம் செய்யப்பட்ட நபர்கள் உடனடியாக மாற்றம் செய்யப்பட்ட முகாமிற்கு மாறுதலில் செல்ல வேண்டும். (அவ்வாறு செல்லவில்லை என்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்)

# தமிழ் கட்சிகளின் அரங்கம்

**நோக்கம்**

01. தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒரு பொதுக் களத்தில் பேசி ஒருமித்த கருத்தையும், நிலைப்பாட்டையும் தமிழ் கட்சிக்குள் உருவாக்குதல்
02. வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் நீதியான அரசியல் அபிலாசைகளை வென்றெடுத்தல்.
03. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் மலையக தமிழ் மக்கள் உட்பட தமிழ் மக்களின் நீதியான அரசியல் அபிலாசைகளை வென்றெடுத்தல்

**அரசியல் வழிமுறைகள்**

01. மேற்கூறிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஒற்றுமையான அரசியல் செயற்திட்டத்தினை உருவாக்குதலும், நடைமுறைப்படுத்தலும்.
02. இந்த நோக்கங்களை அடைவதற்காக இலங்கை தீவுக்குள்ளும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் பேசும் மக்களிடமிருந்தும் அவர்கள் மத்தியில் செயற்படும் அமைப்புக்களிடம் இருந்தும் பங்களிப்புக்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளுதல்.

**தமிழ் கட்சிகளின் அரங்கம் 5 வது தடவையாக 14.08.2010 மட்டக்களப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சந்திரகாந்தன் தலைமையில் கூடிய சமயம் ஆராயப்பட்ட விடயங்களாவன**

- கடந்த தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் எடுக்கப்பட்ட ஒருமித்த தீர்மானத்திற்கமைய தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு அவர்கள் உத்தியோகபூர்வமான முறையில் பதிலளிக்காமையையிட்டு இவ் அரங்கம் தனது கவலையை வெளிப்படுத்துவதுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கான கதவுகள் இன்னும் திறந்தே இருக்கிறது என்பது நினைவூட்டப்பட்டது.
- இன்றைய தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற முக்கிய, உடனடித் தேவைகள் குறித்து அதிக கவனம் செலுத்தியதுடன் அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று சாத்தியமான வழியில் விரைவாகத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**அவையாவன:**

01. அர்த்தமுள்ள மீள்குடியேற்றம்
02. உட்கட்டமைப்புடன் கூடிய மீள் கட்டுமானம்.
03. உயர் பாதுகாப்பு வலயங்கள், மீள் குடியேற்றங்கள்
04. மக்களின் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டு வரும் இராணுவக் குடியேற்றங்கள்
05. முழுமையான சிவில் நிர்வாகத்தினை ஏற்படுத்துதல்
06. ஆயுதப் போராட்டத்தினால் உடைமைகளை, உறவுகளை, அங்கங்களை இழந்த மக்களுக்கு நட்ட ஈடுகளை பெற்றுக்கொடுத்தல்.
07. வடக்கு கிழக்கு உட்பட தமிழ் பேசும் பகுதிகளில் இனப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துதல்.
08. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் கடைபிடிக்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளை தளர்த்துதல்.
09. மீள் குடியேற்றத்தினை வெளிப்படையாகச் செய்வதுடன், அதை மக்கள் பிரதிநிதிகள் சர்வதேச உள்ளூர் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளல்.
10. இனப்பிரச்சினை தீர்வுக்கு மாகாணசபைகளுக்கென பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்ற அரசியல் அமைப்பில் உள்ள 13வது அரசியல் அதிகாரங்களை முழுமையாக அமுல்ப்படுத்துதல் ஆரோக்கியமான முன் முயற்சியாக அமையும்.
11. அடுத்து வரும் கட்டங்களில் தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் முஸ்லீம், மலையக கட்சிகளை இணைப்பது குறித்து ஆராயப்படும்.
12. தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற அரசியல் கைதிகள், இறுதி யுத்த நடவடிக்கையின் போது சரணடைந்து, கைது செய்யப்பட்ட போராளிகளின் விபரங்களை வெளிப்படுத்துவதுடன் அவர்களின் விடுதலைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தல்.

# ஐக்கியம்

தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் வெவ்வேறு காலங்களில் தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க ஐக்கிய முன்னணிகள், கூட்டுக்கள் அமைக்கப்பட்டாலும் அவை நீண்டகாலம் நிலைத்ததில்லை.

எப்போதும் ஐக்கிய முன்னணிகள் குறுகிய ஆயுள் கொண்டவையாகவே காணப்பட்டிருக்கின்றன.

1970 களின் பின்னர் தமிழரசு கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி அமைக்கப்பட்டது. முஸ்லீம் மக்களுக்கென தனித்துவமான கட்சிகள் உருவாகியிருக்க வில்லை. முஸ்லிம் தலைவர்களும் இந்த கூட்டணியில் அங்கம் வகித்தனர்.

1970 களின் நடுப்பகுதியில் தமிழரசுக் கட்சியின் தலைவர் சா.ஜே.வி. செல்வநாயகம், தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோர் கூட்டாக நிற்கும் படமொன்று பிரபலமாக இருந்தது. வட்டுக்கோட்டை தீர்மானங்களின் பின்னரே இந்தப் படத்தை காணமுடிந்தது.

இதன் பின்னர் 1980 களின் முற்பகுதியில் தமிழ் இயக்கங்களிடையே ஐக்கியத்திற்கான முயற்சி லங்காராணி எழுதிய அருளரினால் முன்னெடுக்கப்பட்டது.

1980 களின் நடுப்பகுதியில் திம்புவில் தமிழ் மக்களின் தேசியம் சுயநிர்ணயம் பாரம்பரிய பிரதேசம், மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்துவதில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ரெலோ, விடுதலைப் புலிகள் ஆகிய அமைப்புக்கள் ஒன்றாக பங்குபற்றியிருந்தன.

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களும் தமிழ் அரசியல் சக்திகளை ஐக்கியப்படுத்துவதில் பெரும் பிரயததனங்களை மேற்கொண்டார்.

விடுதலைப் புலிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட சகோதரப் படுகொலை தமிழ் இயக்கங்கள் ஐக்கியமாகச் செயற்படுவதற்கான சாத்தியங்களை கடினமாக்கின.

தோழர் பத்மநாபா அவர்கள் தமிழ் அரசியல் கட்சிகளிடையேயும் சரி மலையக தமிழ், முஸ்லீம் சமூகங்களிடையேயும் சரி, முற்போக்கு சக்திகளுடனும் சரி ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் அவர் அரசியல் பிரவேசம் மேற்கொண்ட நாள் முதல் இறுதி மூச்சுவரை முயற்சிகளை மேற்கொண்டவர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை புலிகள் தவிர்ந்த அனைத்து இயக்கங்களும் ஏற்றுக் கொண்டிருந்தன. அதனடிப்படையிலான அதிகார பரவலாக்கலையும் அங்கீகரித்திருந்தன.

1988 இல் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைமையில் அமைந்த மாகாண அரசாங்கத்தின் அமைச்சரவையில் தமிழ், முஸ்லீம் சிங்கள பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர். பிரதான எதிர்கட்சி ஆசனங்களை முஸ்லீம் காங்கிரஸ் பிரதிநிதிகள் அமர்ந்திருந்தனர்.

எனினும் காத்திரமான கூட்டு என்பது சாத்தியமற்றதாகத்தான் இருந்தது.

2000ம் ஆண்டளவில் புலிகளின் தயவில் தமிழ் தேசிய கூட்டமைப்பு, உருவாக்கப்பட்டது.

மறுபுறம் 2000ம் ஆண்டு நடுப்பகுதியில் புளொட், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி ஆகியன இணைந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த கூட்டமைப்பு பிரதானமாக புலிகளால் மறுக்கப்பட்ட ஜனநாயக இடைவெளிக்காகவும் தமிழ் மக்களின் தேசிய உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தும், செயற்பட்டும் வந்தது.

இப்போது 2009 மே மாதத்திற்கு பிந்திய சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகவும் அன்றாடம் எதிர்நோக்கும் சவால்கள், இருப்புத் தொடர்பான கேள்விகள் இராணுவமயப்பட்ட சூழ்நிலைகள் மீள் குடியேற்றம், அகதி வாழ்விலிருந்து விடுபடுதல், உயர் பாதுகாப்பு வலயங்களிலும் ஏனைய இடங்களிலும் மக்களின் நிலங்கள் உடைமைகள் உரியவர்களிடம் கையளிக்கப்படுதல் சுதந்திரமான வாழ்வு என்பவற்றுக்காக இணைந்து செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது. தமிழ் பேசும் சக்திகள் (தமிழ், மலையகம், முஸ்லீம்கள்) மாத்திரமல்லாமல் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகளுடனும் கரம் கோர்த்து செயற்பட வேண்டியிருக்கிறது.

அந்த வகையில் தமிழ் கட்சிகளின் அரங்கம் கருத்தொருமைப்பாட்டிற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்திருக்கிறது. அது இன்னும் பரந்தளவிலானதாக அனைத்து சமூகங்களினதும் சமூக அக்கறையுள்ள சக்திகளுடனும் இணைந்து நிரந்தரமான அரசியல் தீர்விற்கும் தமிழ் மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் இராணுவமயப்பட்டதும் இருப்புத் தொடர்பானதுமான சவால்களிலிருந்து விடுபடுவதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அகிம்சை, சமாதான வழியில் ஐக்கியமான வழியில் இது முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஐக்கியம் தொடர்பான குறைபாடும், ஐக்கியம் தொடர்பான புரிதல் மற்றும் வரலாற்றுத் தவறுகளுமே தமிழர்களின் வாழ்வை விபரீதங்களுக்கும் பாரிய இழப்புக்களுக்கும் உள்ளாக்கின என்பதை நாம் என்றும் மனதில் இருத்தி ஐக்கியமாக எமது வரலாற்று கடமையை மேற்கொள்ள வேண்டும்.

# காணியற்ற 53 குடும்பங்களின் கண்ணீரை போக்குமா திருமலை அரசு நிர்வாகம்

இல: 300, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலையில் இரண்டு ஏக்கர் காணியில் 50 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் 53 குடும்பங்களை அவ்விடத்திலிருந்துஅ அகற்றுவதற்காக அக் காணியின் உரிமையாளர் வல்லிபுரம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கில் 08.08.2010 நீதிமன்றத் தீர்ப்பின்படி (வழக்கு இல- DC 273) அக் காணியில் குடியிருப்பவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என நீதிமன்ற பதிவாளரால் குடியிருப்பாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. நீதிமன்ற உத்தரவுப்படி குறித்த காணியை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டன இக் குடும்பங்கள்.

கூலித் தொழில் செய்து தங்கள் வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கே அல்லாடிக்கொண்டிருந்த இந்த மக்களுக்கு இல்லிடம் ஒன்றை தேடுவது மேலும் ஒரு சுமையாய் ஆகி அவர்களை அழுத்தியது. அவர்கள் திருகோணமலையில் உள்ள பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிராந்திய காரியாலயத்தில் தங்கள் துயரத்தை எடுத்துக் கூறினர். பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினரான சத்தியன் இந்த மக்கள் குடியிருப்பதற்கான இடமொன்றை ஏற்பாடு செய்து கொடுப்பது தொடர்பாக அப் பிரதேச கிராம சேவகர் கணேசலிங்கத்துடன் கலந்தாலோசித்து பிரதேச செயலாளருக்கு இது விடயம் தொடர்பாக மனுவொன்றைக் கையளிக்க முடிவுசெய்யப்பட்டது.

அனைவரும் சத்தியன் தலைமையில் ஒன்றாக பிரதேச செயலகத்திற்கு சென்று பிரதேச செயலாளர் திருமதி யலதீபனிடம் மனுவொன்றை கையளித்தனர். இதற்கு பதிலளித்த பிரதேச செயலாளர் காணி விடயம் தொடர்பாக தன்னால் உடனடியாக எதையும் செய்ய முடியாதெனக் கூறி அவர்களிடமிருந்து விடுபடுவதற்காக அரசாங்க அதிபரிடம் தெரிவிக்குமாறு இந்த விடயத்தில் இருந்து ஒதுங்கிக் கொண்டார். திரும்பவும் அம் மக்கள் அனைவரும் திருகோணமலை கோட்டையில் இருக்கும் கச்சேரிக்குச் சென்று உதவி அரசாங்க அதிபர் நடராஜாவை சந்தித்து இந்த விடயம் சம்பந்தமாக எடுத்து விளக்கினர். அவர் அரசாங்க அதிபரை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். அரசாங்க அதிபர் மேஜர் சில்வா அம் மக்களில் மூவரை அழைத்து இவ் விடயம் சம்பந்தமாக கேட்டறிந்து தொலைபேசியில் பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குவதற்கு கிராமசேவகர் மூலம் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். இதனையடுத்து கிராம சேவகர் மூலமாக விண்ணப்பங்கள் பதியப்பட்ட பின்பு கிராம சேவகர் மூலமாகவோ, அல்லது பிரதேச செயலாளர் மூலமாகவேமா இம் மக்களுக்கு எந்த வித உதவிகளும் செய்யப்படவில்லை. இதனைத தொடர்ந்து பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் பிரதேச செயலாளருக்கு எடுத்துக் கூறப்பட்டு கிராம சேவகர் ஊடாக காணி கச்சேரி சேவை வரும் போது இம் மக்களுக்கு காணிகள் வழங்குவதுடன் தற்காலிகமாக இவர்கள் குடியிருப்பதற்கு குடியிருப்புக்களும் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் இம் மக்களுக்கான குடியிருப்பு வசதிகளை செய்து தருவதாக பிரதேச செயலாளரால் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இம்மக்களின் அவல நிலை நீங்குமா, என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இரத்தினப்பிட்டிய, சி.ஆர்.சி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.